Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 11 ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 26 (24.04.2006) திங்கட்கிழமை இதழ் 206

# பயங்கரமான யுத்தத்துக்குள் இலங்கை தள்ளப்படுகிறது!

## அன்ரன் பாலசிங்கம் எச்சரிக்கை


லண்டன் —

தமிழர் தாயகப்பகுதிகளில் இராணுவத்தினராலும் துணை ஆயுதக்குழுவினராலும் தமழ் மக்கள் தொடர்ச்சியாக படுகொலை செய்யப்பட்டு வருவதாவது - நாட்டை பயங்கரமான போருக்குள் தள்ளிவருவதாக விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

சண்டே லீடர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

வடக்கு - கிழக்கின் நிலைமை மிகவும் மோசமடைந்து சீர்குலைந்துள்ளது. கடந்த டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களைப் போல நிழல் யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டு மிக மோசமான நிலை உருவாகியுள்ளது.

ஜெனிவா பேச்சுக்களுக்கு பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவல் நிலைகள் மீது துணை இராணுவக் குழுவினரது உதவியுடன் தாக்குதல்கள் தொடங்கிவைக்கப்பட்டன. (02 ஆம் பக்கம் பார்க்க)



## இருபாலையில் ஓட்டோ சாரதி ஆயுததாரிகளால் படுகொலை

யாழ்ப்பாணம் —

இருபாலைச் சந்தியில் நேற்று ஓட்டோ சாரதியான இளைஞர் ஒருவர் ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். நேற்று நண்பகல் 12.20 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது -

இருபாலை சந்தியிலுள்ள ஓட்டோ



## பாரிய தாக்குதல்கள் நடத்துவோம்!

### பொங்கியெழும் மக்கள் படை எச்சரிக்கை

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டு மக்கள் மீது இராணுவத்தினரும், ஒட்டுக்குழுக்களும் திட்டமிட்டு நடத்திவரும் படுகொலைகள் அதிகரித்துவரும் நிலையில் - அவர்களுக்கு எதிரான பாரிய தாக்குதல் களை பரவலாக நடத்தவுள்ளதாக யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை விடுத்துள்ளதாக வெளியிட்ட அறிக்கையில் -

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழின அழிப்பின் புதிய வடிவமாக யாழ். குடாநாட்டில் வயது வேறுபாடின்றி எமது மக்களை அழித்தொழித்து வருவதையும், எதிர்வரும் காலங்களில் எமது இளைஞர்களை கொல்வதே சிங்கள ஆட்சியாளர்களின் நோக்கம் என்பதை

பாதுகாக்கவும், இயல்பு வாழ்க்கைக்காகவும் பொங்கியெழும் மக்கள் படையாகிய நாம் பொறுமை காத்தோம்.

தொடரும் இன அழிப்பின் நோக்கத்தைப் புரிந்துகொண்ட நாங்கள் எதிர் நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்ளாமல் இருப்பதை எமது பலவீனம் எனக் கருதி சிங்கள காடையர்

யாழ்ப்பாணம்

இருபாலைச் சந்தியில் நேற்று ஓட்டோ சாரதியான இளைஞர் ஒருவர் ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். நேற்று நண்பகல் 12.20 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது -

இருபாலை சந்தியிலுள்ள ஓட்டோ தரிப்பிடத்தில் மேற்படி இளைஞர்

(12 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டு மக்கள் மீது இராணுவத்தினரும், ஒட்டுக்குழுக்களும் திட்டமிட்டு நடத்திவரும் படுகொலைகள் அதிகரித்துவரும் நிலையில் - அவர்களுக்கு எதிரான பாரிய தாக்குதல் களை பரவலாக நடத்தவுள்ளதாக யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் -

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழின அழிப்பின் புதிய வடிவமாக யாழ். குடாநாட்டில் வயது வேறுபாடின்றி எமது மக்களை அழித்தொழித்து வருவதையும், எதிர்வரும் காலங்களில் எமது இளைஞர்களை கொல்வதே சிங்கள ஆட்சியாளர்களின் நோக்கம் என்பதையும் நாங்கள் புரிந்துகொண்டுள்ளோம்.

இதுவரையும் எமது மக்களை பாதுகாக்கவும், இயல்பு வாழ்க்கைக் காகவும் பொங்கியெழும் மக்கள் படையாகிய நாம் பொறுமை காத்தோம்.

தொடரும் இன அழிப்பின் நோக்கத்தைப் புரிந்துகொண்ட நாங்கள் எதிர் நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்ளாமல் இருப்பதை எமது பலவீனம் எனக் கருதி சிங்கள காடையர்களும், ஒட்டுக்குழுக்களும் தமது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர் சுட்டுக்கொலை!



யாழ்ப்பாணம்

நாவாந்துறை- கொட்டடிப் பகுதியில் நேற்று புளொட் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

நவாந்துறை கொட்டடி காதி அபூபக்கர் வீதியில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் மேற்படி நபர் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் புளொட் உறுப்பினரான அமிர்தநாதன் கெனடி (வயது 40) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பிரேத பரிசோதனைக்காக பிரேத

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று தமிழ் இளைஞர்கள் திருமலையில் படுகொலை!

திருகோணமலை

திருகோணமலையில் மூன்று இளைஞர்கள் நேற்றும் படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சீனன்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்பல்துறை கிராமத்தில் நேற்றுக்காலை ரோந்து நடவடிக்கை மேற்கொண்ட விமானப் படையினரால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். விமானப்படையினர் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ள முற்பட்ட வேளையே இவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கந்தளாயில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இரண்டு தமிழ் இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

இவர்கள் கந்தளாய் - பேராற்றுவெளி ரயில்வே கடவைக்கு அருகேயுள்ள பொட்டன்காடு பகுதியில் உள்ள படையினரின் காவலரண் மீது தாக்குதல் நடத்தியதாகவும், பதில் தாக்குதலிலேயே இருவரும் கொல்லப்பட்டனர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு சிங்களவர்கள் மொரவெவவில் சுட்டுக்கொலை!

திருகோணமலை

திருகோணமலை - மொரவெவ பகுதியில் ஆறு சிங்கள விவசாயிகள் நேற்று இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுமாலை 5 மணியளவில் கோமரங்கடவெல - கல்லன்பற்று என்ற இடத்தில் உள்ள வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஆறு சிங்கள விவசாயிகளே ஆயுததாரிகளால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பகுதிக்குள் ஊடுருவி படையினர் நேற்றும் தாக்குதல்!

வவுனியா

வவுனியாவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் இராணுவ அணியினர் ஊடுருவி லொறி மீது நடத்திய கிளைமோர் தாக்குதலில் லொறிச் சாரதி படுகாயமடைந்தார்.

வடக்கு வவுனியாவில் ஏ-9 வீதிக்கு கிழக்கே உள்ள சேமமடு கிராமத்துக்கு வடக்காக உள்ள அனந்தர்புளியங்குளம் பகுதிக்குள் ஊடுருவி நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் லொறி ஒன்றின் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் லொறி சேதமடைந்ததுடன் சாரதியின் கால் சிதைந்தது. இவர் உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

படையினரின் இந்தத்தாக்குதல் தொடர்பாக போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட தலைவரிடம் வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ஞானம் முறைப்பாடு செய்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐஸ்கிறீம் வான்மீது நேற்றிரவு சூடு!

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம்-நாச்சிமார் கோவிலடியில் வைத்து ஐஸ்கிறீம் வான்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று இரவு 7.30மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் எஸ். கஜேந்திரன் (வயது22) என்பவரே காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)





திருகோணமலை - கன்னியாவில் தமிழ் இளைஞர் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து தமது கிராமத்தைவிட்டு வெளியேறி அகதிகளாகியுள்ள தமிழ் மக்கள்.

# பயங்கரமான யுத்தத்துக்குள்...

அரச படைகளால் கருணா குழுவுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது.

திருகோணமலையில் தமிழ்மக்கள் பேரவைத்தலைவர் வி.விக்னேஸ்வரனை இராணுவ புலனாய்வுத்துறையினரும் துணை இராணுவக் குழுவினரும் இணைந்து படுகொலை செய்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன.

துணை இராணுவக் குழுவினர் இல்லையென்று தொடர்ந்து மகிந்த ராஜபக்ஷ கூறிவருகிறார். இத்தகைய வெட்கக்கேடான அரசாங்க மறுப்புக்கள் மூலம் ஜெனீவா உடன்பாடு அர்த்த மற்றதாகிவிட்டது. தமிழ் துணை இராணுவக் குழுக்களை அரசாங்கமே பாதுகாக்கின்றபோது வன்முறைகள் நிறுத்தப்பட்டு முன்னேற்றகரமான அமைதிச் செயற்பாடுகள் எப்படி மேற்கொள்ள முடியும்?

துணை இராணுவக்குழுவினரது வன்முறைகளும் அவர்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் செயற்பாடுகளும் அமைதி முயற்சிக்கு பாரிய அச்சுறுத்தல் என்றே நாங்கள் கருதுகின்றோம்.

தமிழர் தாயகப் பகுதிகளில் பழிக்குப் பழிவாங்கும் விதமாக தொடர்ச்சியாக தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்ற மோசமான சூழ்நிலையானது ஒரு பயங்கர இனப் போருக்குதான் இந்த நாட்டைத் தள்ளும்.

ஜெனிவாவில் அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் எதைப் பற்றிப் பேசுவது என்பதுதான் மில்லியன் டொலர் கேள்வி.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் தொடர்புடைய இருதரப்பினர் ஜெனிவாவில் பேச்சுக்களை நடத்தி அதை மதித்து நடக்கவும் தொடர்ந்து கடைப்பிடிக்கவும் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் இருதரப்பு நம்பிக்கையீன்மை, சந்தேகங்கள் அதிகரித்து வருகின்றது. கருணாகுழுவை தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்திக் கொள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கணக்கிட்டு வருகிறார். மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இராணுவ வழித் தீர்வை விட்டுவைக்கவில்லை.

கடும் போக்காளர்களை பாதுகாப்புப் பொறுப்புக்களில் அவர் நியமித்தார். அமைதிவழித் தீர்வில் நாட்டமில்லாத - நோர்வே அனுசரணையாளர்கள் மீது சந்தேகம் கொள்கின்ற விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேச அளவில் பரப்புரை மேற்கொண்டு பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கின்ற போக்குடைய இத்தகைய நபர்களின் நியமனமானது மகிந்த ராஜபக்ஷவின் இராணுவ வழித் தீர்வு நாட்டத்தையே வெளிப்படுத்துகிறது.

அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் வடக்கு - கிழக்கின் பொருண்மிய அபிவிருத்தி தொடர்பாக விவாதிக்கலாம் என்று சில அமைச்சர்கள் கூறியுள்ளனர். தமிழர் தாயகப் பகுதிகளில் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்துள்ள நிலையில்- இத்தகைய யோசனைகள் நகைப்பிற்குரியன. போர் அச்சுறுத்தல் உள்ள நிலைதன்மையற்ற சூழ்நிலையில் பொருண்மிய அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்த முடியாது.

வடக்கு - கிழக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகள் என்று கூறப்படுகிற பிரதேசங்களில் அரசாங்கத்தின் கட்டுப்பாடு இழந்து வருகிறது. அப்பாவித் தமிழ் மக்களைப் பாதுகாக்க முடியாமல் சட்டம் ஒழுங்கு நிலைமை முற்றிலுமாகச் சீர்குலைந்துள்ளது. அவசரகாலச் சட்டத்தின் மூலமாக தமிழர் தாயகப் பகுதிகளிலும் சரத் பொன்சேகாவின் கொடுங்கோன்மையான நிர்வாகம் இயங்கி வருகின்றது. இதனால் மக்களின் ஆயுத எழுச்சிக்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு தொடர்பில்லாதவை குறித்து ஜெனிவாப் பேச்சுக்களில் பேசவும் அரசாங்கத்தரப்பில் சில யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மகிந்தவின் சிந்தனையில் கற்பனை செய்து பார்க்கக் கூடிய செயற்திட்டங்களுக்கோ கொள்கை[illegible]கோ இடமில்லை.

தமிழ் பேசும் மக்களின் தயாகக் கோட்பாடு, பிரதேச தன்னாட்சி அரசாங்கம் ஆகியவற்றை எதிர்த்து ஒற்றையாட்சி யாப்பை வலியுறுத்துகின்றது.

தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை சிக்கலாகி வன்முறைகள் அதிகரித்து வருவது கவலைக்குரியது. போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தினால் நிலைமையைச் சீர்படுத்த முடியும்.

தற்போதைய பயண ஒழுங்கு பிரச்சினையால் ஏப்ரல் 24 ஆம் திகதி பேச்சுக்கள் நடைபெறாது. பயண ஒழுங்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் போது பேச்சுக்கள் மீண்டும் நடைபெறும் என அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

# உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு அங்கத்தவர்களிடையே போட்டி

யாழ்ப்பாணம்

உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளை ஒவ்வொரு பிரிவுகளிலிருந்து ஐந்து இளைஞர் அங்கத்தவர்கள் மத்தியில் போட்டி நிகழ்வுகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது. (பதினைந்துபிரிவுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் 75 இளைஞர் அங்கத்தவர்களுக்கும் எழுத்துப் பரீட்சை நடை பெற்று பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறும் முதலிரண்டு பிரிவுக்குமிடையே வினாடி வினாப் போட்டி நிகழ்வு இடம் பெறும்.

செஞ்சிலுவைசங்கத்தின் தோற்றம், செயற்பாடுகள், கொள்கைகள், சர்வதேச தேசிய மற்றும் வெளிநாட்டு செஞ்சிலுவை அமைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக வினாக்கள் அமையும்.

எழுத்துப்பரீட்சை மே 6ம் திகதி சனிக்கிழமை காலை 9.30மணிக்கும் வினாடி வினாப் போட்டி மே 8ம் திகதி திங்கட்கிழமை பகல் .11.30 மணிக்கும் கிளை தலைமையகத்தில் நடைபெறும். விண்ணப்பங்களை இந்த மாதம் 28ம் திகதிக்கு முன் யாழ்ப்பாணக்கிளைக்கு அனுப்பிவைக்கவும்

எழுத்துப் பரீட்சையில் முதல் ஐந்து இடங்களை வென்றவர்களுக்கு பரிசில்களும், வினாடி வினாப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படும்.

இதேவேளை, இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை ஜப்பான் செஞ்சிலுவைக் சங்க உதவியுடன் பிரிவுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்கள், தொண்டர்களுக்கிடையில் (ஆண்கள், பெண்கள்) 100 மீற்றர், 400மீற்றர், 800மீற்றர் ஓட்டப் போட்டிகளும் ஆண்களுக்கான உயரம் பாய்தல், நீளம் பாய்தல் போட்டிகளும் நடை பெறவிருக்கின்றன.

ஒவ்வொரு போட்டியிலும் 3 அங்கத்தவர்கள்அல்லது தொண்டர்கள் ஒவ்வொரு பிரிவிலும் இருந்து பங்குபற்றலாம்.

போட்டியாளர்களின் பெயர், விலாசம், பிறந்த திகதி, ஆகிய விபரங்களை வைகாசி மாதம் 1ம் திகதிக்கு முன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளைக்கு அனுப்பி வைக்கும்படி யாழ்ப்பாணக்கிளைத் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணே சலிங்கம் சகல பிரிவுகளுக்கும் அறிவித்துள்ளார். (21)

# புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழில் 4000 பேருக்கு வீடுகள்

## அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்

வட-கிழக்கில் வீடமைப்பு புனர்நிர்மாண திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்டத்தில் நான்காயிரம் பேருக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரசஅதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

வட-கிழக்கு வீடமைப்பு புனர் நிர்மாண திட்டங்கள் பயிற்றுனரை பயிற்றுவிக்கும் பயிற்சித் திட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகைலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

வீடுகள் இன்றி துன்பப்படும் மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பது ஒரு புண்ணியமான செயற்பாடாகும். இந்த வீடமைப்பு திட்டத்துடன் சேர்ந்து பணியாற்றும் உத்தியோகத்தர்கள் நேர்மையாகவும், உற்சாகமாகவும் செயற்பட வேண்டும்.

அர்ப்பணிப்புடன் மக்களை வழி நடத்த வேண்டும். உண்மையில் வீடமைப்பு வசதிகளை திருப்திகரமாக செய்தோம் என்று எங்கள் மனச் சாட்சி சொல்ல வேண்டும். வடக்கு கிழக்கு வீடமைப்பு நிர்மாணத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் நான்காயிரம் பயனாளிகள் யாழ். மாவட்டத்தில் தெரிவாகியுள்ளனர்.

இந்தப்பயனாளிகள் தெரிவில் கிராமிய புனர்வாழ்வுக் குழுக்களும், பிரதேசமட்ட உத்தியோகத்தகளும் செயற்பட்டுள்ளீர்கள். இந்தப்பயனாளிகள் மத்தியில் இருந்து கட்டு மான தொழிலாளர்களையும், வளங்களையும் இனங்கண்டு போதிய சரியான தகவல்களை அவர்களுக்கு வழங்கி வழி நடத்த வேண்டிய உயரிய பொறுப்பு கிராமிய புனர்வாழ்வுக் குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் ஏனைய எமது உத்தியோகத்தர்களுக்கும் உள்ளது.

இந்த அனுபவத்தை முன்னுதாரணமாகக் கொண்டு அனர்த்தங்கள் பாதித்த பாகிஸ்தான் போன்ற நாடுகளில் வீட மைப்பு திட்டங்களை அமுல் செய்ய சர்வதேச நிறுவனங்கள் முயல்கின்றன எனவும் அவர் கூறினார்.

# வளர்ப்புநாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம்

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி 4ஆவது கட்டமாக கீழ்வரும் நிலையங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இந்தச் சர்ந்தப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாஸ் தெரிவித்தார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி நல்லூர் பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் காலை 8 மணிமுதல் 10.30 மணிவரையும், 11 மணிமுதல் 12.30 மணிவரை வன்னி பொ/பணி மன்றத்திலும், 2மணிமுதல் 3.30 மணிவரை மூத்த விநாயகர் சனசமூக நிலையத்திலும்.

27 ஆம் திகதி காலை 8மணி முதல் 10.30 மணிவரை கொன்றலடி சனசமூக நிலையத்திலும், 11 மணி முதல் 12.30 மணிவரை ஜனசக்தி ச.ச.நிலையத்திலும், 2மணிமுதல் 3.30 மணிவரை திருநெல்வேலி சிவன் கோயில் முன்றலினும்.

28ஆம் திகதி காலை 8 மணி முதல் 10.30 மணிவரை நல்லூர் தெற்கு ச.ச.நிலையத்திலும், 11 மணி முதல் 12.30 மணிவரை அரியாலை சரஸ்வதி ச.ச.நிலையத்திலும், விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப் படவுள்ளது.

# நெடுந்தீவில் இருகிராமங்கள் வீடமைப்புத் திட்டத்தில் தெரிவு!

நெடுந்தீவு

உலகவங்கி நிதி உதவியுடன் நியாப் திட்டத்தின் கீழ் நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் இரு கிராமங்கள் வீடமைப்புத்திட்டத்திற்கென தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நெடுந்தீவு கிழக்கு ஆலமானக் கிராமத்தில் 20வீடுகளும்,மேற்கு கோட்டைக்காடு கிராமத்தில் 20வீடுகளும் தலா 21/2 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. இதன் பிரகாரம் குறித்த கிராமங்களைச் சேர்ந்த 40குடும்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ள குடும்பங்கள் இத்திட்டத்தில் பயன்பெறுவதற்கு பொருத்தமானவர்கள் என அப்பிரதேச மக்கள் தெரிவு செய்யும் வகையில் பெயர் விபரங்கள் நெடுந்தீவு பிரதேச செயலகத்தால் பொதுஇடங்களில் வைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கதாகும் (113)

DAIDO Mopet



48CC

Koyo

ரேசர்கள்

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO



ஏகமுகவர்

செல்டிப் மோட்டர் என்டர்பிறைஸ் (பிரைவேட்) லிமிட்டட்

60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.

தொலைபேசி : 011-2341580-1, 2438779,

பக்ஸ் 011-2454605

E.mail: zme@slt.lk

நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந், அஷிமா

மற்றும் பலர் நடித்த

சுதேசி

கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30

நாதவின்ஸ் யாழ்ப்பாணம்

எஸ்.ஜே.சூர்யா,

நயன்தாரா,

விவேக்

நடித்த



கள்வனின் காதலி

கா.நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்

புதுவருட வெளியீடு

பரத்,

மல்லிகா கபூர்

மற்றும் பலர்

நடித்த

அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது



இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

ப.நேரம் : 10.30,2.30,6.30,9.30

மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு


அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த

திருப்பதி

இரண்டாவது வெற்றி வாரம்



காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30



# ஹன்சன் பெளயரை சந்திக்க ஜனாதிபதி மஹிந்த மறுப்பு

கொழும்பு—

அமைதி முயற்சிகளுக்கான நோர்வே விசேட பிரதிநிதி ஹன்சன் பெளயரை சந்திக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

நோர்வே அனுசரணைப் பணி தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீர ஆகியோர் கடும் விமர்சனங்களை அண்மையில் வெளியிட்டிருந்தனர்.

இந்த விமர்சனங்கள்தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவை தொலைபேசியில் அழைத்த நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தனது கடும் அதிருப்தியை வெளியிட்டார்.

மகிந்தவுடனான தொலைபேசி உரையாடலின்போது அருகாமையில் இருந்த மங்கள சமரவீரவிடமும் எரிக் சொல்ஹெய்ம் இது தொடர்பாகத் தனது வருத்தத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

முன்னதாகக் கடிதம் ஒன்றையும் ஜனாதிபதி மகிந்தவுக்கு நோர்வே அனுப்பியிருந்தது. நோர்வேக்கு விளக்கமளிக்குமாறு அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் - இலங்கை வந்த நோர்வே விசேட பிரதிநிதி ஜோன் ஹன்சன் பெளயரைச் சந்திக்க மகிந்த ராஜபக்ஷ மறுத்துவிட்டார். இதனால் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மங்கள, சமரவீர ஆகியோரை ஹன்சன் பெளயர் சந்தித்தார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட்டும் ஜனாதிபதி மகிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்கவை அழைத்து மகிந்த ராஜபக்ஷ, பெளயரை சந்திக்க வேண்டும் என்று கூறியுள்ளார். ஆனால், அமெரிக்க தூதுவரின் கோரிக்கையையும் மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை வன்செயல்; 150 மில்லியன் சொத்து சேதம்!

திருகோணமலை—

திருகோணமலையில் சிங்களக் காடையர் கும்பலால் கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்களால் 150 மில்லியன் ரூபா மதிப்பிலான தமிழரது சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக திருமலை தொழில் வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

திருமலை தொழில் வர்த்தக சம்மேளனம் விடுத்த அறிக்கையில் இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வன்முறைகளால் மொத்தம் 32 வர்த்தக நிறுவனங்கள் பாதிக்கப்பட்டன. கட்டுமானப் பொருட்கள் விற்பனை நிலையங்கள், நகைக் கடைகள், உணவகங்கள், முடிதிருத்தும் நிலையங்கள் மற்றும் தகவல் தொடர்பு மையங்கள் என அனைத்து வகை தொழில் நிறுவனங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.


மொத்தம் 90 மில்லியன் ரூபா மதிப்பிலான பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளன. 3 மில்லியன் ரூபா மதிப்பிலான வாகனங்கள் நாசப்படுத்தப்பட்டன.

வர்த்தக நிறுவனங்களின் நேரடி இழப்பு 33 மில்லியன் ரூபா, கட்டட சேதங்கள் 21 மில்லியன் ரூபா, வீடுகளின் சேத மதிப்பு 5 மில்லியன் ரூபா.

அண்மையில் திருமலை சென்ற அமைச்சர் ரோகித போகல்லாகமவிடம் இந்த அறிக்கையை திருமலை தொழில் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் ஆர். இராஜாராம்மோகன் கையளித்தார்.

இனவன்முறையில் இராஜாராம் மோகனின் வர்த்தக நிறுவனம் நிர்மூலமாக்கப்பட்டு நான்கு லொறிகள் மற்றும் புதிய வாகனம் ஆகியவை தீக்கிரையாக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நோர்வே எதிர்ப்பைக் கைவிட ஜே.வி.பிக்கு 7 அமைச்சுக்கள்?



கொழும்பு—

இலங்கை சமாதான முயற்சிகளின் அனுசரணையாளரான நோர்வேயை ஜே.வி.பி. எதிர்ப்பதைக் கைவிட ஏழு அமைச்சுப் பொறுப்புக்களை பேரமாக வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்வந்துள்ளதாக கூறப்படுகிறது.

சமாதான செயற்பாடுகளில் நோர்வே அரசாங்கத்துக்கு எதிராக தெரிவிக்கும் எதிர்ப்புக்கள் மற்றும் கடுமையான கொள்கைகளைக் கைவிட்டு - அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு முயற்சிக்குமாறு ஜே.வி.பிக்கு ஜனாதிபதி மகிந்த அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

ஜே.வி.பி மீண்டும் அரசாங்கத்துடன் இணைந்தால் மூன்று அமைச்சுப் பொறுப்புக்களையும், நான்கு பிரதியமைச்சுப் பொறுப்புக்களையும் வழங்குவதற்கு தான் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

மகிந்த தெரிவித்திருக்கும் கருத்துக்கள் பற்றி ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச தனது கட்சிக்குத் தெரிவித்தையடுத்து - கட்சியினுள் கருத்து வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஒருசாரார் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்று அரசாங்கத்துடன் மீண்டும் இணையவேண்டும் எனக் கூறுகையில், ஏனைய தரப்பானது அப்படிச் செய்யாது சுயாதீன குழுவாக எதிர்க்கட்சியிலிருந்து செயற்பட வேண்டுமெனக் கூறியுள்ளது.

எனினும், இது தொடபாக ஜே.வி.பி இதுவரை இறுதி முடிவு எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க சீனா ஆதரவாம்!

கொழும்பு—

இலங்கையின் நில ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கு சீனா ஆதரவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவைச் சந்தித்த சீனத் துணை ஜனாதிபதி சியாங் குயிங்கொங் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் - தாய்வான் மற்றும் திபெத் விவகாரங்களில் சீனாவுக்கு இலங்கை வழங்கும் ஆதரவைப் பாராட்டுவதாகக் குறிப்பிட்டார்.

கடந்த 1957 ஆம் ஆண்டு தொடக்கம் இரு நாடுகளும் இராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கிடையிலான நம்பிக்கை வலுவடைந்துள்ளதோடு பொருளாதாரம் மற்றும் வர்த்தகத்தில் மிகவும் விரிவாக்கம் கண்டுள்ளது.

சீனாவிலிருந்து தாய்வானும் திபெத்தும் பிரிந்து செல்வதற்கு எதிராக இலங்கை குரல் கொடுத்து வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

இதேபோல- தேசிய ஐக்கியத்தையும் நில ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு சீனா ஆதரவு வழங்கும்.

தேசிய நலன்களுடன் தொடர்புடைய முக்கிய விடயங்களில் எதிர்காலத்தில் இரு நாடுகளும் கூடுதல் அக்கறை செலுத்துவதோடு தொடர்ந்தும் அனைத்துகை மற்றும் பிராந்திய விடயங்களில் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டுமெனவும் பிரதமரிடம் சீனத் துணை ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

# வடகிழக்கு நிலைமை குறித்து ஆராய விசேட குழு நியமனம்



கொழும்பு—

வடக்கு - கிழக்கின் தற்போதைய நிலைமைகளை ஆராய்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான விசேட குழுவை சுதந்திரக் கட்சி நியமித்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பற்றி அறிவிப்பதற்காக மகாவலி நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதுகுறித்து அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்தக் குழுவில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா, மங்கள சமரவீர, அநுர பிரியதர்சன யாப்பா, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

உள்ளூராட்சி சபைகளில் அபிவிருத்தி மற்றும் நீதி, நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தலைமையிலான குழுவை நியமிக்கவும் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சர்வதேச நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவை நியமிக்கவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார்.

# முஸ்லிம் படையணி அமைக்கும் முயற்சி தோல்வி!

கொழும்பு—

இராணுவத்தில் முஸ்லிம்களுக்கான தனி படையணி அமைக்கும் முயற்சி வெற்றி பெறவில்லை என்று கூறப்படுகிறது.

கிழக்குப் பகுதி முஸ்லிம்களைப் பாதுகாக்க இந்தப் படையணி உருவாக்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்தமைக்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்டது.

எனினும், கடந்த ஏப்ரல் 5ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை முஸ்லிம் படையணிக்கான ஆட்சேர்ப்பு சம்மாந்துறை, கல்முனை, நிந்தவூர் மற்றும் அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் நடைபெற்றது.

இந்தப் படையணியில் 350 முஸ்லிம் இளைஞர்களைத் தெரிவு செய்ய இராணுவத் தலைமையகம் எண்ணியிருந்தது. ஆனால் 100 பேர்தான் தெரிவாகியுள்ளதாகவும் இதனால் தனி முஸ்லிம் படையணி செயற்படுவதற்கான சாத்தியம் இல்லை என்றும் இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

# பேச்சுக்கள் தொடர வேண்டும் இந்திய தூதுவர் தெரிவிப்பு!



கொழும்பு—

இழுபறிநிலையில் உள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை தொடர வேண்டும் என இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

வன்முறைகளை கைவிட்டு இரு தரப்பினரும் இரண்டாம் கட்ட ஜெனிவாப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றி, சமாதானத்தை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமாகும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமராவ் தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக இரதரப்பாலும் மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகள் அதிகரித்து வருவதால், சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடையும் நிலையில் இருக்கிறது.

இந்த நிலையில், இருந்து விடுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச சமாதான செயலக பணிப்பாளர் பணிநீக்கம்?

கொழும்பு—


சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் வகையில் கருத்து வெளியீட்டு வருவதாகக்கூறி சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன பதவியிலிருந்து நீக்கப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை சமாதான முயற்சிகளின் அனுசரணையாளர்களாக இருக்கும் நோர்வே அரசின் செயற்பாடுகள் பற்றி வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருக்கும் கருத்துகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது கடும் எதிர்ப்பை தெரிவித்தார்.

நோர்வே அரசாங்கம் பற்றி வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருக்கும் கருத்து தொடர்பாக அந்த நாட்டு அரசாங்கம் மகிந்தவுக்கு எழுத்துமூலம் அறிவித்திருப்பதையடுத்தே அவர் வெளிவிவகார அமைச்சரை எச்சரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

நோர்வே அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அந்தநாட்டு அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மே கையெழுத்திட்டுள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் கொழும்பு ஆங்கில பத்திரிகைக்கு அமைச்சர் மங்கள சமரவீர வழங்கிய நேர்காணலில்- பல இடங்களில் நோர்வே அனுசரணை பற்றி கடும் விமர்சனங்களைத் தெரிவித்திருந்தார். வெளிவிவகார அமைச்சர் இத்தகைய கருத்தை வெளியிடுதல்- அரசாங்கத்தின் கருத்துக்களுடன் நேரடியாகச் சம்பந்தப்படுவதால் அதற்கு பதிலளிக்கும் வகையில் நோர்வே அரசாங்கம் கடும் நிலைப்பாட்டுடன் ஜனாதிபதிக்கு இந்தக்கடிதத்தை அனுப்பியுள்ளது.



இது தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை மங்கள சமரவீரவை அலரிமாளிகைக்கு அழைத்த மகிந்த ராஜபக்ஷ, நோர்வே அரசாங்கம் அனுப்பிய கடிதம் தொடர்பாக விளக்கம் கோரினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சமரவீர- சமாதான செயற்பாடுகளின் அனுசரணையாளர்களாக நோர்வே அரசு செயற்பட்டாலும், அவர்கள் தொடர்ச்சியாக இராஜதந்திர சம்பிரதாயங்களை மீறி வருவதாக தெரிவித்தார்.

மேலும், நோர்வே அரசாங்கத்தின் எந்தவொரு நடவடிக்கையையும் இந்தநாட்டு வெளிவிவகார அமைச்சினூடாக மேற்கொள்வதில்லை என்றும் கூறினார்.

இந்த நிலைமைக்கு தீர்வு காண்பதாக தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ- இனிமேல் சமாதான செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் கருத்துக்களை வெளியிடுவதை தவிர்க்குமாறு மங்களவை எச்சரித்தார்.

இதனிடையே ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு சமாதான செயலகப் பணிப்பாளர் நாயகம் பாலித கொகன்னவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகத்தகவல்கள் தெரிவித்தன.

தற்போதைய சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாக கடந்த சில நாட்களாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கும் சில கருத்துக்களால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலையால் ஜனாதிபதி மகிந்த இந்தத் தடையை விதித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அவரின் கருத்துக்கள் சமாதான செயற்பாடுகள் சீர்குலைவதற்கு காரணமாக இருப்பதாகவும் ஜனாதிபதிக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த நிலையில் பாலித கொகன்னவை அந்தப் பதவியிலிருந்து நீக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவித்தன.

# கிரனேட் வீச்சில் 5 பொலிஸார் காயம்

திருகோணமலை—

திருகோணமலை - அனுராதபுரச் சந்திக்கு அருகிலுள்ள பொலிஸ் காவலரண் மீது மேற் கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் ஒரு பொலிஸார் படுகாய மடைந்ததுடன் மேலும் நால்வர் சிறு காயமடைந்தனர்.

நேற்று முன்தினமிரவு 7.15 மணியளவில் அனுராதபுரச் சந்தியிலுள்ள பொலிஸ் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து சுமார் 15 நிமிடம் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த பொலிஸார் கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதாகவும், அதில் ஒருவரின் நிலைமை மிக மோசமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (10)

# முதலாவது ஒருநாள் போட்டியில் வெற்றிபெற்றது அவுஸ்ரேலியா





சிட்டகொங் ——

அவுஸ்ரேலிய - பங்களாதேஷ் அணிகளிடையே நேற்று சிட்டகொங்கில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணியின் நபீஸும், ரஜின் சாலேயும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

இதில் ரஜின் சாலே 7 ஓட்டங்களைப் பெற்று - பிறக்கன் வீசிய பந்தை லீயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து அப்ரப் அகமட் களமிறங்க, 16 ஓட்டங்களைப் பெற்றிருந்த நபீஸ், லீ வீசிய பந்தை கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து களமிறங்கிய அஸ்ரபுல் 5 ஓட்டங்களை மட்டும் பெற்று பிறக்கன் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து பசார், அகமட்டுடன் இணைந்து ஆடினார். பின்னர் 4 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 30 ஓட்டங்களைப் பெற்றிருந்த அகமட், லீ வீசிய பந்தை கிளார்க்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் இம்ரான் களமிறங்கினார். அவர் 20 ஓட்டங்களைப் பெற்று ஹொக்கின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து காலித் மசூத் களமிறங்க, 52 ஓட்டங்களைப் பெற்றிருந்த பசார், ஹொக் வீசிய பந்தை கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து ரபீக் களமிறங்கினார். ஆனால், மறுமுனையில் நின்ற மசூத் 27 ஓட்டங்களைப் பெற்று ஜோன்சன் வீசிய பந்தில் போல்டானார்.

தொடர்ந்து மொட்ராசா களமிறங்கி, ஒரேயொரு ஓட்டத்தை மட்டும் பெற்று ஹொக் வீசிய பந்தை கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந் ரர்.

அடுத்து அப்தூர் ரசாக் களமிறங்க, 8 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரபீக், சைமன்ஸ் வீசிய பந்தை ஹொக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியாக களமிறங்கிய ரசல் ஓட்டமெதையும் பெறாமல் சைமன்ஸின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இதனால் பங்களாதேஷ் அணி 47 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் ரசாக் 2 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ஹொக் 3, லீ, பிறக்கன், சைமன்ஸ் ஆகியோர் தலா 2, ஜோன்சன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 196 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்ரேலிய அணி களமிறங்கியது. அந்த அணியின் கில்கிறிஸ்ட்டும், கடிச்சும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

இதில் கில்கிறிஸ்ட் தனது வழமையான அதிரடி ஆட்டத்தை ஆடினார். அவர் முதலாவது விக்கெட்டாக 46 பந்துகளில் 9 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக 76 ஓட்டங்களைப் பெற்று ரசாக்கின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து மைக்கல் கிளார்க் களமிறங்க, 18 ஓட்டங்களைப் பெற்றிருந்த கடிச், மொட்ராசா வீசிய பந்தை பசாரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து சைமன்ஸ் களமிறங்கி, ஓட்டமெதையும் பெறாமல் ரசாக்கின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் களமிறங்கிய பொண்டிங் 14 ஓட்டங்களை மட்டும் பெற்று அப்துர் ரசாக்கின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஹூசே களமிறங்க, 16 ஓட்டங்களைப் பெற்றிருந்த கிளார்க் ரன் அவுட்டானார்.

அடுத்து ஹூசேயுடன், ஹொக் இணைந்தார். ஆனால், அவர் 7 ஓட்டங்களை மட்டும் பெற்று இம்ரானின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து லீ, ஹூசேயுடன் இணைந்து அவுஸ்ரேலிய அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

அவுஸ்ரேலிய அணி 44 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் ஹூசே 36, லீ 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் ரசாக் 3, மொட்ராசா, இம்ரான் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# யாழ்.வலய மட்டத்திலான மெய்வல்லுனர் போட்டிகள்

யாழ்ப்பாணம் ——

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோப்பாய், நல்லூரி, யாழ்ப்பாணம் ஆகிய கோட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

இந்தப்போட்டிகள் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் 26ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடைபெற்று, மே மாதம் இதே மைதானத்தில் நடைபெறவுள்ள மாவட்ட மட்ட மெய்வல்லுனர் போட்டியில் கலந்துகொள்ளும் போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்தப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 1 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் போட்டியாளர்களுக்கான இலக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

எனவே, யாழ்.வலயமட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களின் பாடசாலை விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் க.குமாரசாமி கேட்டுக்கொண்டுள்ளார். (58)

# விளையாட்டு

# யாழ்.மாவட்ட மட்டத்திலான பூப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் ——

யாழ்.மாவட்ட பாடசாலைகளிடையே நடத்தப்பட்டுவரும் விளையாட்டுப் போட்டிகளின் ஒரு அங்கமாக நடத்தப்பட்ட பூப்பந்தாட்டப் போட்டியில் ஆண், பெண் இரு பிரிவு முடிவுகளும் வெளியாகியுள்ளன.

19 வயதுப் பிரிவுக்காக நடத்தப்பட்ட இந்தச் சுற்றுப் போட்டியின் ஆண், பெண் இரு பிரிவுகளிலும் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம் முதலாமிடத்தைப் பெற்றது.

இந்தச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகள் விபரம் வருமாறு -

1ஆம் இடம் : உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம், 2ஆம் இடம் : சென்.ஜோன்ஸ் கல்லூரி, 3ஆம் இடம் : யாழ்.இந்துக் கல்லூரி.

பெண்கள் பிரிவு : 1ஆம் இடம் : உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம், 2ஆம் இடம் : உடுவில் மகளிர் கல்லூரி, 3ஆம் இடம் : சுண்டிக்குளி மகளிர் கல்லூரி. (58)

# கிரிக்கெட்டிலிருந்து லக்ஷ்மன் இப்போது ஓய்வுபெறமாட்டார்




ஹைதராபாத் ——

நான் 30 வயதை அடைந்தும் கிரிக்கெட்டில் இருப்பதை சிலர் விமர்சிக்கிறார்கள். பந்துவீச்சாளருக்குத்தான் வயது ஒரு பிரச்சினையே தவிர, துடுப்பாட்ட வீரர்களுக்கு அல்ல. ஓய்வுபெறும் அளவுக்கு எனக்கு வயதாகிவிடவில்லை. இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் வி.வி.எஸ்.லக்ஷ்மன்.

நான் இப்போது ஓய்வுபெறமாட்டேன். 30 வயது வீரர்கள் பலர் முன்பும் இருந்துள்ளனர், இப்போதும் இருக்கிறார்கள். நான் துடுப்பாட்டம், களத்தடுப்பு இரண்டிலும் நீண்டகாலமாக சிறப்பாகச் செய்திருக்கிறேன்.


நான் ஓய்வுபெறவேண்டும் என்பதற்கு சரியான காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லையென லக்ஷ்மன் ஹைதராபாத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் தெரிவித்தார். அங்கு அவர் கூறியதாவது -

பயிற்சியாளர் சிரேக் சப்பல் 100 வீதம் வெற்றி வாய்ப்புள்ள அணியைத்தான் உருவாக்குகிறார். நான் வெற்றி வாய்ப்புக்கொண்ட வீரர் என்று அவர் கருதுகிறார். இதை பல முறை நிரூபித்துள்ளேன். அடுத்தடுத்து போட்டிகள் நடந்தபோது நான் சில நெருக்கடிகளால் மோசமாக விளையாடி இருக்கலாம். ஆனால், நான் மோசமான வீரர் அல்ல. நான் நம்பிக்கையோடு இருக்கிறேன்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கான சுற்றுப்பயணத்தில் நிச்சயம் எனது திறமை வெளிப்படும். இதற்காக கடுமையாக உழைத்து வருகிறேனென லக்ஷ்மன் கூறினார்.

# அப்ரிடியின் முடிவில் மாற்றமில்லையாம்

லாகூர் ——



உலகக்கிண்ணப் போட்டிவரை டெஸ்ட் போட்டிகளில் விளையாடாமல் ஓய்விலிருக்கப் போவதாக பாகிஸ்தான் அணியின் அதிரடி ஆட்டக்காரர் அப்ரிடி கூறியிருந்தார்.


ஆனால், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. டெஸ்ட் போட்டியிலும் அப்ரிடி விளையாடவேண்டுமென சபை வற்புறுத்தியுள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் தேர்வுக் குழுத் தலைவர் வாசிம்பாரி கூறும்போது -

அப்ரிடியின் ஓய்வு முடிவு அதிர்ச்சியைத் தருகிறது. நாங்கள் அவரை மறுபரீசீலனை செய்யும்படி கேட்டிருக்கிறோம். ஆனால், அவர் பிடிவாதமாக இருக்கிறார். டெஸ்ட், ஒருநாள் போட்டி இரண்டிலுமே எளிதில் ஆட்டத்திறனுடன் விளையாடக் கூடியவர் அப்ரிடி. அவரை விடமுடியாது என கூறினார்.

# பந்துவீச்சு நுணுக்கங்களை அக்ரமிடம் கேட்டறிந்த லீ

சிட்னி ——



பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் வசீம் அக்ரமை, அவுஸ்ரேலிய வீரர் பிரெட் லீ சந்தித்து பந்துவீச்சு நுணுக்கங்களைக் கேட்டறிந்தார்.

பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டனும், முன்னணி வேகப்பந்து வீச்சாளருமான வசீம் அக்ரமை, அவுஸ்ரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ சந்தித்து பந்துவீச்சு நுணுக்கங்களைக் கேட்டறிந்தார்.

பின்னர் இது குறித்து பிரெட் லீ கூறுகையில் -

அக்ரமிடம் பந்துவீச்சு நுணுக்கங்களைக் கேட்டறிந்தேன். இந்தச் சந்திப்பு பயனுள்ளதாக இருந்தது. அப்போது பந்தை எப்படி ரிவர்ஸ் ஸ்விங் செய்வது என்பது குறித்து கேட் டறிந்தேன்.

கடந்த ஆசஷ் தொடரில் இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு அந்த அணியின் பந்துவீச்சாளர்கள் ரிவர்ஸ் ஸ்விங் செய்ததும் முக்கிய காரணமாகும் என்றார்.

பிரெட் லீயைச் சந்தித்தது குறித்து அக்ரம் கூறுகையில் - இங்கிலாந்துக்கு எதிரான அடுத்த ஆசஷ் தொடரில் பிரெட் லீ பந்தை ரிவர்ஸ் ஸ்விங் செய்வதைப் பார்க்கலாம். இது குறித்து அவருக்கு சிறிது சொல்லிக்கொடுத்தேன். அது அவருக்கு பந்துவீச்சில் புது ஆயுதமாக இருக்கும்.

இதில் சிறப்பாகச் செயற்படவேண்டுமென்றால் கடுமையான பயிற்சி தேவை. தற்போதுள்ள அனைத்து வீரர்களும் ஆட்டத்தை மேம்படுத்திக் கொள்ள முயற்சி எடுத்து வருவது பாராட்டுக்குரியது என்றார்.

# மாவட்ட மட்ட உதைபந்தாட்டத்தில் ஹென்றியரசர், அருணோதய வெற்றி

யாழ்ப்பாணம் ——

யாழ்.மாவட்ட பாடசாலைகளிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் புனித ஹென்றியரசர் கல்லூரி, அருணோதயக் கல்லூரி என்பன வெற்றிபெற்றன.

இந்த சுற்றுப் போட்டி கடந்த வியாழக்கிழமை பொது விளையாட்டு மைதானத்திலும், யாழ்.மத்திய கல்லூரியிலும் நடைபெற்றன.


இதில் 19 வயது பிரிவு இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மோதியது. இந்தப் போட்டி ஆரம்பத்திலிருந்து மிக விறுவிறுப்பாக நடைபெற்றபோதும், எந்த அணியும் கோல் எதனையும் போடாமையால், சமனிலை உடைப்பு முறை மூலம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வெற்றிபெற்றது.

இதேபோன்று 17 வயதுப் பிரிவு இறுதிப் போட்டியும் அமைந்திருந்தது. இதில் புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தை எதிர்த்து அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி மோதியது. இந்தப் போட்டியிலும் சமனிலை உடைப்பு முறையில் அருணோதயக் கல்லூரி அணி வெற்றிபெற்று சம்பியனாகியது.

19 வயதுப் பிரிவில் - இரண்டாமிடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரியும், மூன்றாமிடத்தை ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

17 வயதுப் பிரிவில் இரண்டாமிடத்தை புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயமும், மூன்றாமிடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

இந்தச் சுற்றுப்போட்டியில் முதலிரு இடங்களைப் பெற்ற அணிகள் மாகாணமட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன. (58)





யாழ். எழுத்தாளர்களின் நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. நிகழ்வில் மல்லாகம் மாவட்ட நீதிவான் சரோஜினி இளங்கோவன் உரையாற்றுவதையும், எழுத்தாளர் ஒருவரின் நூல் வெளியிட்டு வைக்கப்படுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படம் - தயாளன்

# வலி. வடக்கில் மீளக்குடியேற 7,615 குடும்பங்கள் விருப்பம்

யாழ்ப்பாணம் —

வலி.வடக்கு பகுதியில் இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்தில் மீளக்குடியமர 7 ஆயிரத்து 615 குடும்பங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற வலி.வடக்கு மக்களின் மீளக்குடியமர்வு தொடர்பான கலந்துரையாடலிலேயே இந்த விபரம் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் சட்டத்தரணியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் சி.சிவமகாராஜா, யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு அந்தப் பகுதியைச்சேர்ந்த விவசாயிகள் இருவர் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மனித உரிமை மீறல் வழக்கு விசாரணையின் போது - கட்டம் கட்டமாக மீளக்குடியமர அனுமதிக்குமாறு யாழ்.அரச அதிபர் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

இதனடிப்படையில் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயக மூர்த்தியிடம்- மீளக்குடியமர விரும்பும் மக்களை ஒன்றிணைத்து அமைப்பு ஒன்றினூடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு உயர்நீதிமன்றம் கேட்டிருந்தது.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களூடாக வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து மீளக்குடியமர விரும்பும் மக்களின் விபரங்கள் கோரப்பட்டிருந்தன.

இந்தக் கலந்துரையாடலில் சாவகச்சேரி தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலிருந்து 7615 குடும்பங்கள் தாம் மீளக்குடியமர விரும்புவதற்கான பதிவுகளை செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபரங்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமுர்த்தி தெரிவித்தார்.

# எட்டு நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாண எழுத்தாளர்களின் நூல்களின் வெளியீடும் கண்காட்சியும் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

மல்லாகம் மாவட்ட நீதிவான் சரோஜினி இளங்கோவன் தலைமையில் இம்பெற்ற இந்த நிகழ்வில் - வாழ்த்துரைகளை எழுத்தாளர்களான செங்கை ஆழியான், பொ.சண்முகநாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து நல்லூர் கே.வி.கணேசரத்தின் 'திருக்குறள் இன்பத்துப் பால்', இளவாலை கீர்த்தி எழுதிய 'வேரை மறந்த விழுதுகள்' (நாடகம்), திருநெல்வேலி உதயச்செல்வனின் 'மொட்டுக்களை மலரவிடுங்கள்' (நாவல்), நல்லூர் மாயவனின் 'இது தான் ஆரம்பம்' (மர்ம நாவல்), கந்தரோடை பொ.சண்முகநாதனின் 'நினைக்க சிரிக்க சிந்திக்க' (கட்டுரைகள்), யாழ்ப்பாணம் மு.கதிர்காமநாதனின் 'அறிஞர்கள் சொன்ன அனுபவ மொழிகள்' (தொகுப்பு), கொக்குவில் சுதந்திரராஜாவின் 'அடிவாரம்' (நாவல்), யாழ் வாணனின் 'மலர்ந்த வாழ்வு' (சிறுகதைகள்) ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா நிகழ்வுகள் இடம் பெற்றன. (ஈ)

# நவநாள் கொண்டாட்டம்

கொக்குவில் —

நாவாந்துறை தெற்கு, புனித நீக்கிலார் தேவாலய வருடாந்த நவநாள் கொண்டாட்டங்கள் கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

29 ஆம்திகதி சனிக்கிழமை வரை தொடர்ந்து 10 தினங்கள் நவநாள் ஆராதனைகள் இடம்பெறும். தினமும் மாலை 6 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகி பிரசங்கம், ஆராதனைகள் நடைபெற இருக்கின்றன.

எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழா இடம்பெறும். 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அன்றைய தினம் மாலை 6 மணிக்கு திருச்சொரூபம் ஆரம்பமாகும். இரவு 8.30 மணிக்கு திருச்சொரூப ஆசீர் வழங்கலுடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவடையும். (206)

# சுனாமி நிவாரண பரிந்துரைகள் இடைநிறுத்தமென அறிவிப்பு!

வடமராட்சி —

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் அரச நிறுவனங்களோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ கடற்தொழிலாளர் திணைக்களத்திடமோ அல்லது சமாசத்துடனோ தொடர்பை ஏற்படுத்தாது தான்தோன்றித்தனமாக நிவாரணங்களை வழங்குவதால் பாரிய சிக்கல்கள் எழுந்துள்ளதாக வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சமாச பொது முகாமையாளர் சூரியகுமார் தெரிவித்தார்.

இந்தச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த இறுக்கமான முடிவுகளை எடுப்பதற்காக கடந்த வெள்ளி முதல் சுனாமி நிவாரணப் பரிந்துரைகள் எதுவும் இடம்பெறாது எனவும் தெரிவித்தார்.

மேலும் இவ்வாறு உதவி வழங்குவதற்காக முன்வரும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் - கடற்தொழிலாளர்களிடமோ அல்லது சமாசத்திடமோ அனுமதியைப் பெற்று அவர்களூடாக வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். (12)

# கடற்தொழிலாளர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிச்சூடு

வடமராட்சி —

பருத்தித்துறை - இன்பருட்டி கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த கடற்தொழிலாளர்களை நோக்கி கடற்படையினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தமையால் வடமராட்சி கடற்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் இன்பருட்டி பகுதி கடற்தொழிலாளர்கள் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை - திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்கு கடற்படையின் கப்பலொன்று வந்துகொண்டிருந்தது. அதற்குப் பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்த டோறா படகுகளில் இருந்த கடற்படையினர் கடற்தொழிலாளர்களின் படகுகளை நோக்கி சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததோடு, படகுகளை அசையாது நிற்குமாறும் உத்தரவிட்டனர்.

இதனையடுத்து படகுகளில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த கடற்தொழிலாளர்கள் கப்பல் செல்லும்வரை நீண்டநேரம் காத்திருந்து அதன்பின்னரே கரை திரும்பினர்.

இந்தச் சம்பவத்தில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களால் வடமராட்சி இன்பருட்டி மற்றும் கடற்கரையோர பிரதேசங்களில் பதற்ற நிலையும் காணப்பட்டது. (12)

# யாழ்.-கொழும்பு விமானசேவை விரைவில் விரிவுபடுத்தப்படும்!

## எக்ஸ்போ எயார் பணிப்பாளர் தெரிவிப்பு



படம் - தயாளன்

யாழ்ப்பாணம் —

இலங்கையில் தனியார் விமான சேவை நிறுவனமான எக்ஸ்போ எயார் நிறுவனம் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான விமான சேவையை விரிவுபடுத்தவுள்ளது.

இது தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் அண்மையில் யாழ்.நகரிலுள்ள எக்ஸ்போ எயார் நிறுவன அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது நிறுவனத்தின் பணிப்பாளர் செராஜ் மொகமட் மற்றும் நிர்வாக அலுவலரும் கணக்காளருமான கே.வசீகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் ஒரு விமான சேவையை மட்டும் நடத்தி வந்த இந்த நிறுவனம், இந்த மாதத்தில் காலை, மாலை ஆகிய இரு விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது. இதன் மூலம் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு சிறப்பான விமான சேவைகளை வழங்கவுள்ளது.

உள்ளூர் விமான சேவைகளை மாத்திரம் நடத்தி வந்த எக்ஸ்போ நிறுவனம் வெளிநாடுகளுக்கும் விமான சேவைகளை நடத்த சிவில் விமான போக்குவரத்திடம் அனுமதியைக் கோரியுள்ளது.

இதன் முதற்கட்டமாக இந்தியாவின் முக்கிய நான்கு நகரங்களுக்கு விமான சேவைகளை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் திருச்சி, திருவனந்தபுரம், கொச்சின் ஆகிய நகரங்களுக்கான விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது.

ஆசியாவில் 12 நாடுகளுக்கு விமான சேவைகளை நடத்த அனுமதி கோரியிருந்தோம்.

முதற்கட்டமாக இந்திய நகரங்களுக்கு விமான சேவைகள் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதும் - விரைவில் ஏனைய ஆசிய நாடுகளின் நகரங்களுக்குமான விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும்.

2002 ஆம் ஆண்டு போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் முதன் முதலில் யாழ். - கொழும்பு விமான சேவையை நடத்த அனுமதி பெற்று சிறந்த போக்குவரத்துச் சேவையை நடத்தும் நிறுவனமாக எமது நிறுவனம் விளங்குகிறது.

இந்த சேவைக்கு மேலும் மவுசு அதிகரிக்கும் பட்சத்தில் மேலதிக விமானங்கள் மூலம் சேவையை விரிவுபடுத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர்.


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : பி.எழிலினி
முகவரி : வட்டக்கச்சி.

### அகவை நான்கு



பெயர் : சி.பவருஜன்
முகவரி : நீர்வேலி தெற்கு.

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------
முகவரி ----------
பிறந்த ஆண்டு: ----------

கூப்பன்களும் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------
பெற்றோர் ஒப்பம்


# நெடுந்தீவில் இரு கிராமங்கள் வீடமைப்புத் திட்டத்தில் தெரிவு!

நெடுந்தீவு —

உலகவங்கியின் நிதியுதவியுடன் நியாப் திட்டத்தின் கீழ் நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் இரு கிராமங்கள் வீடமைப்புத் திட்டத்துக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நெடுந்தீவு கிழக்கு - ஆலமானக் கிராமத்தில் 20 வீடுகளும், மேற்கு கோட்டைக்காடு கிராமத்தில் 20 வீடுகளும் தலா இரண்டரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. இதன் பிரகாரம் குறித்த கிராமங்களைச் சேர்ந்த 40 குடும்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ள குடும்பங்கள் இந்தத் திட்டத்தில் பயன்பெறுவதற்கு பொருத்தமானவர்கள் என அந்தப் பிரதேச மக்கள் தெரிவு செய்யும் வகையில் பெயர் விபரங்கள் நெடுந்தீவு பிரதேச செயலகத்தால் பொது இடங்களில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

## நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I

### பகுதி 'அ'

(ஒரு மணித்தியாலம்)

**பகுதி 'அ'விலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதி பகுதி 'ஆ' வின் விடைத்தாளுடன் இணைத்து ஒப்படைக்குக.**
**பகுதி 'ஆ' வில் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

பகுதி 'அ'

**பின்வரும் கூற்றுக்கள் ( ) சரியா (×)பிழையா என்பதைக் கூட்டினுள் குறியிட்டுக் காட்டுக.** ✓

1. தமிழ் நாட்டில் பார்சி நாடக மரபு கர்நாடக இசையையே தளமாகக் கொண்டிருந்தது. ( )
2. தொவில் நடனத்தில் (DEVIL DANCE) வேடமுகப் பயன்பாடு காணப்படுகிறது. ( )
3. ஷேக்ஸ்பியர் அவலச்சுவை நாடகங்களை மட்டுமே அளிக்கை செய்தார். ( )
4. 'தைநீராடல்' எனும் சடங்கு திருவெம்பாவையுடன் தொடர்பு உடையது. ( )
5. 'ஓர் இரவு' நாடகம் கலைஞர் மு.கருணாநிதியால் எழுதப் பட்டது. ( )

**பின்வருவனவற்றில் சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.**

6. வெண்கட்டி வட்டம் (Chalk circle) என்ற நாடகத்தை எழுதியவர்
   1. ஹென்றிக் இப்சன்
   2. அன்ரன் செக்கோவ்
   3. பெட்ரோல்ட் பிரெக்ட்
   4. காளிதாசன்

7. இந்திரவிழாவின் போது மாதவி ஆடியது
   1. பதினொரு ஆடல்கள்
   2. குறவஞ்சி
   3. குன்றக்குரவை
   4. பரதநாட்டியம்

8. மாணிக்கமாலை நாடகம் சமஸ்கிருத மரபில் எந்த வகைக்குரியது?
   1. நாடிக 2. நாடக 3. பிரகரண 4. பிரகசன

9. இலங்கையில் ஆங்கில அரங்கின் முன்னோடி எனக் கருதப்படுபவர்
   1. ஜீபால் 2. ஏணெஸ்ற் மக்கின்ரயர்
   3. ஈ.எப்.சி லுடோவைக் 4. அழகு சுப்பிரமணியன்

10. 'முறைமை' எனப்படும் நடிப்பியல் கோட்பாட்டைத் தோற்றுவித்தவர்
    1. ஸ்ரனிஸ்லவஸ்கி 2.அன்ரன் செக்கோவ்
    3. பெட்றோல்ட் பிரெக்ட் 4. மேயர்கோல்ட்

11. பேராசிரியர் சு.வித்தியானந்தன் தயாரித்த இராவணேசன் என்பது
    1. மரபு வழித் தென்மோடிக் கூத்து 2. மரபுவழி வடமோடிக்கூத்து
    3. மரபு வழி நொண்டிக் நாடகம் 4. புத்தாக்கக் கூத்து

12. செரிப்பழத்தோட்டம் (Cherry Orchard) எனும் நாடகம் முதலில் எழுதப்பட்டது
    1. பிரெஞ்ச மொழியில் 2. ருஷ்ய மொழியில்
    3.ஜேர்மன் மொழியில் 4. இத்தாலிய மொழியில்

**கீறிட்ட இடங்களை நிரப்புக**

13. 'கண்ணாடி வார்ப்புகள்' என்ற நாடகத்தைத் தமிழில் தயாரித்தவர்
    ..........................................................................
14. 'சங்காரம்' நாடகத்தை எழுதியவர்..........................................
15. பிரஹசன என்பது ....................... உபநாடக வகைகளில் ஒன்று

**குறுவிடைகள் தருக.**

16. காமன் கூத்தில் வரும் பிரதான ஆண் பாத்திரங்கள் இரண்டு தருக.
    1.............................. 2. ..................................
17. வடமோடிக் கூத்து ஆடப்படும் இரண்டு பிரதேசங்களைக் குறிப்பிடுக.
    1.............................. 2. ..................................
18. கிரேக்க மகிழ்நெறி நாடகாசிரியர் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
    1. ............................ 2. ..................................
19. கத்தோலிக்க கதை சம்பந்தப்பட்ட இரு நாடகங்களைக் குறிப்பிடுக.
    ..........................................................................
20. கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை எழுதிய இரு நூல்களின் பெயர் களைக் குறிப்பிடுக.
    1.................................. 2...................................

## நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II

(இரண்டு மணித்தியாலம்)

**ஒவ்வொரு பிரிவிலிருந்தும் இரண்டு வினாக்களைத் தெரிந்தெடுத்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

பகுதி ஆ

பிரிவு I

### உலக அரங்கு

1. மன்னன் ஈடிப்பஸ் நாடகத்தை ஒரு தலைசிறந்த திறஜெடி நாடகமாக்கும் அதன் அம்சங்கள் யாவை என்பதை விளக்குக.
2. அன்ரன் செக்கோவின் குறியீட்டு வெளிப்பாட்டுக்கு செரிப்பழத்தோட்டம் நல்ல உதாரணம் ஆகும். உமது அனுபவங்களைக் கொண்டு அதனை தெளிவுபடுத்துக.
3. ஒரு பாவையின் வீடு நாடகத்தின் அளிக்கை முறைமையின் பிரதான அம்சங் களை எடுத்துக் கூறுக.
4. ஒதெல்லோ நாடக நாயகன் தனது மனைவியை கொலை செய்தது நியா யமா? உமது காரணத்தை விளக்குக?

**பிரிவு II**

### இலங்கை அரங்கு

5. இலங்கையில் கூத்து மரபுகள் காணப்படும் பிரதேசங்களைக் குறிப்பிட்டு, அந்தக் கூத்துக்களையும் ஆராய்க?
6. கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் நவீன தமிழ்நாடக வளர்ச்சியில் பெறும் இடத்தினை மதிப்பிடுக.
7. இலங்கையில் இசைநாடகத்தின் அல்லது நூர்த்தியின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் ஆராய்க. (Nurti)
8. கலாநிதி ...ரை செ.சுந்தரம்பிள்ளை நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பினை விளக்குக?

**ஆசிரியர்:**
**க.கனகேஸ்வரன்**

## இந்து நாகரீகம் II

### பகுதி அ

**1.1 தொடக்கம் 1.5 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. பிரஸ்தான கிரயம் என்பது
   i. இருக்கு, யசுர், சாமம்
   ii. கந்தபுராணம், பெரிய புராணம் திருவிளையாடல் புராணம்
   iii. பிரமதத்திரம், குருகீதை, பகவத்கீதை
   iv. உபநிடதம், வேதாந்தம், சித்தாந்தம்
   v. பிரமசூத்திரம், பகவத்கீதை, உபநிடதம்

2. சைவத்தின் சிந்தித்துக் கண்டறிந்த முடிவான உண்மை எனக் கருதப்படுவது?
   i. வேதாந்தம் ii. சித்தாந்தம் iii. ஷண்மதம்
   iv. திருமறைகள் v. உபநிடதம்

3. இந்துக்களின் உயர் இலட்சியங்கள் எனப்படுபவை.
   i. பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்
   ii. சரியை, கிரியை, யோகம், ஞானம்
   iii. கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், ராஜயோகம்
   iv. அறம், பொருள், இன்பம், வீடு
   v. சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள்

4. திரி ரத்தினங்கள் எனப்படுபவை
   i. பிரமம், ஆன்மா, பிரபஞ்சம் ii. அணு, புற்கலம், லோகாசம்
   iii. புத்தம, தர்மம், சங்கம் iv. அறம், பொருள், இன்பம்
   v. ஆணவம்,கன்மம், மாயை

5. அர்த்தசாஸ்திரத்தை கொண்டு சுருக்கமாக எழுதப்பட்டநூல்
   i. காமான்..க நீதிசாரம் ii. காமசாஸ்திரம்
   iii. இராஜநீதி iv. நீதிசாஸ்திரம் v. குமாரசம்பவம்

**1.6தொடக்கம் 1.10 வரையுள்ள வினாக்களில் அமைந்துள்ள வாக்கியங்கள் சரியானால் (சரி) எனவும் பிழையானால் (பிழை) எனவும் அடைப்புக்குறிக்குள் அடையாளமிடுக.**

6. கினயான பௌத்தம் உள்ள நாடு இலங்கை ( )
7. தத்துவ திரயம் பேசியவர் சங்கரர் ( )
8. இந்துக்களது ஆட்சி நெறி இராஜதர்மம் ( )
9. வத்ரயஜவன், திவோதாசன், சுதாசன, திரிசதஸ்பு என்போர் வேதகால அரசர் ஆவர் ( )
10. குப்தர் கால கல்வெட்டுக்களிலும் சாளுக்கிய கல்வெட்டுக்களிலும் இசை பற்றிய குறிப்புக்கள் உண்டு ( )

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

**1.11 தொடக்கம் 1.15 வரையிலான வினாக்களுக்குரிய விடைகளை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

11. சத்ஷத விலட்சணம் என்றால் என்ன?

12. புறத்தே பொருளென எதுவும் இல்லை, அகத்தே ஆன்மாவும் இல்லை எனக் கூறும் நெறியாது?

13. முப்பொருள் உண்மையை உணர்த்தும் சிவவடிவம் யாது?

14. இராஜதரங்கிணி எனும் நூல் குறிப்பிடும் கலை யாது?

15. இந்துக்களால் பஞ்சமா பாதகங்கள் என விலக்கப்படவேண்டியவை எவை?

**1.16. தொடக்கம் 1.20 வரையுள்ள வாக்கியங்களில் வரும் இடைவெளி களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

16. ஆலயக் கிரியைகளை ஆற்றுவதில் கைதேர்ந்தவன் .................................. ஆவான்

17. மத்துவர் உருவாக்கிய கொள்கையின் இரண்டும் இரண்டுதான் இரண்டு ஒன்றல்ல என்று குறிப்பிட்ட இரண்டு பொருட்கள் ........................... ............................ என்பவையே

18. ஆச்சிரம நெறியில் குடும்பத்தலைவர் நெற்றியில் கோடுகள் விளைவும் தலையில் நரைதோன்றவும் ஆரம்பித்தபின் காட்டுக்குச் செல்வதைக் குறிக்கும் நிலையில் ......................... என அழைப்பர்.

19. இராஜேந்திர சோழன் கட்டிய பெரிய கோயில் .............................. ஆகும்.

20. சைவ சித்தாந்த சாஸ்திரங்களுள் சித்தாந்த, அஷ்டகம என்ற நூல்களை எழுதிய பெருமைக்குரியவர் ............................ ஆவார்

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைஎழுதுக**

**<u>பகுதி ஆ</u>**

II. வேதாந்தத் தத்துவ வளர்ச்சியில் சங்கரது அதன் வதம் பெறும் முக்கியத்துவத்தினை மேல் வருவனவற்றின் அடிப்படையில் ஆராய்க.
   அ) சங்கரர் பயன்படுத்திய பிரமாணங்கள்
   ஆ) பிரமம் - ஆன்மா
   இ) உலகம்
   ஈ) இராமானுஜரில் இருந்து வேறுபடும் விதம்

III. காட்டும் பதியினரு பிரதானமாக அம்சங்களினை மேல்வரும் விடயங்கள் குறித்து விளக்குக.
   அ) பதி உண்டு என்பதை நிரூபிக்கும் முறை
   ஆ) இறைவனது இயல்புகள்
   இ) இறைவனும் ஆன்மாவும்
   ஈ) ஆன்ம விடுதலையில் இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையிலான தொடர்பு

IV. இந்துமதம் - பௌத்தம் என்பவற்றுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமையை ஆராய்க.

V. பிரதான இந்துக்களது கல்வியின் பிரதானமான அம்சங்களை மேல்வரும் விடயங்கள் குறித்து ஆராய்க
   அ) நோக்கம்
   ஆ) குருகுலகல்வி
   இ) கல்வி நிறுவனம்

VI. சோழர் கால கோயில் கட்டிடக் கலையின் முக்கிய அம்சங்களை மேல்வருவனவற்றின் அடிப்படையில் ஆராய்க.
   அ) பிரதான வளர்ச்சிக் கட்டங்கள்
   ஆ) விமானம்
   இ) பொதுப்பண்பு

VII. இந்துவிக்கிரக கலை வளர்ச்சியின் உன்னத நிலையைக் காட்டி நிற்பது நடராஜர் வடிவமாகும். இக்கூற்றை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
   அ) பிரதி மாலட்சணம்
   ஆ) பொதுப்பண்பு

VIII. தென்னிந்தியாவில் இடம் பெற்ற இசைக்கலை வளர்ச்சியில் கோயில்கள் வகித்த பங்கினை தெளிவுறுத்துக.

IX. புராதன இந்துக்களின் நீதிபரிபாலன முறை பற்றி ஒரு விமர்சனக் கட்டுரை வரைக.

X. மேல்வருவனவற்றுள் எவையேனும் மூன்றைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.
   அ) நால்வகை ஆச்சிரமங்கள்
   ஆ) இந்துக்களின் ஓவியக் கலை
   இ) அர்த்த சாஸ்திரம்
   ஈ) சிவஞான போதம்
   உ) இந்துக்களின் ஓவியக்கலை

ஆசிரியர்:
க.கனகேஸ்வரன்

# புவியியல் II

## (சூழற்புவியியல் )

## பகுதி II

ஒவ்வொரு பகுதியிலுமிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

**<u>பகுதி I</u>**

1\. I) அவுஸ்திரேலிய புறவரிப்படத்தில் A B என்ற எழுத்துக்களால் குறிப்பிட்டிருப்பது 2006 ஏப்ரல் மாதம் அவுஸ்ரேலியாவைத் தாக்கிய இரு சூறாவளிகளின் நகர்வுத் திசையாகும். இவற்றின் பெயர்களையும் அவற்றால் பாதிப்படைந்த அவுஸ்ரேலிய மாநிலங்களையும் ஒழுங்கு முறையில் எழுதுக. (4 புள்ளி)

II) 1,2,3,4 என இலக்கமிடப்பட்ட பகுதியில் நிலவும் காலநிலை வகையை (கெப்பனது) குறியீட்டு எழுத்துடன் உமது விடைத்தாளில் எழுதுக. (4 புள்ளி)

III) இந்தக் காலநிலை தன்மைகளுக்கும் அயனச் சூறாவளிகளின் உருவாக்கத்திற்கும் இடையிலான தொடர்புகளைப் பரிசீலனை செய்க. (7 புள்ளி)

2\) I)கடற்கரையோரம் ஒன்றில் தின்னல் மேற்கொள்வதில் கடலலையின் தொழிற்பாட்டை சுருக்கமாக விளக்குக.

II) கடற்கரையோரங்களில் கடலலையின் தின்னலினால் ஏற்படும் மூன்று நிலவுருவங்களை உதாரணங்கள் விளக்கப்படங்களின் உதவியுடன் ஆராய்க. (9புள்ளி)

3\) I) அங்கி, இனம்,குடித்தொகை,சாகியம்,சூழற்தொகுதி என்பவற்றைப் பற்றிய கருத்துரை தருக.

II) இவை உயிரின மண்டலத்தில் கொண்டுள்ள பங்களிப்பினை விளக்குக. (10+5 புள்ளி)

4\) I) உலக நீரியல் வட்டச் செயற்பாட்டில் மேற்பரப்புக் கழுவு நீரோட்டத்தின் பங்களிப்பைச் சுருக்கமாக விளக்குக. (6புள்ளி)

II) மனித நடவடிக்கையில் மேற்பரப்பு நீரானது எத்தகைய செயற்பாடுகளுக்குப் பயன்படுகிறது என்பதனை உதாரணங்களுடன் தருக. (9புள்ளி)

**<u>பகுதி II</u>**

5\) I) தற்போது சுற்றாடல் பிரச்சினைக்குக் காரணமான நான்கு மனித நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (4புள்ளி)

II) நீர் குறிப்பிட்ட நடவடிக்கைகள் சுற்றாடல் பாதிப்பில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை உதாரணங்களுடன் விபரிக்குக. (11 புள்ளி)

6\) I) அயன மண்டலப் பகுதிசளில் காடுகள் அழிக்கப்படுவதற்கான மூன்று காரணங்களைச் சுருக்கமாக விளக்குக.

II) அயன மண்டலக் காடுகளைப் பாதுகாக்கும் முறைகளை நடைமுறைப்படுத்துவதில் இந்த நாடுகள் எதிர்நோக்கும் மூன்று பிரச்சினைகளை உதாரணத்துடன் விளக்குக. (6+9 புள்ளி)

7\) I) பச்சை வீட்டு வாயுக்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3புள்ளி)

II) பச்சை வீட்டு விளைவு என்பதனால் கருதப்படுவது யாது? (3புள்ளி)

III) வளிமண்டலத்தில் பச்சை வீட்டு வாயுக்கள் அதிகரிப்பதனால் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற எதிர்கால விளைவுகளைப் பரிசீலனை செய்க. (3+3+9 புள்ளி)

8\) I) தரை செழிப்பற்றுப் போதல் என்பதனால் கருதப்படுவது யாது?

II) தரை செழிப்பற்றுப் போவதில் மனிதனது பங்களிப்புக்கள் மூன்றைக் குறிப்பிடுக?

III) தரை செழிப்பற்றுப் போவதால் ஏற்படும் பாதக விளைவுகள் மூன்றை விபரிக்குக. (3+3+9புள்ளி)

ஆசிரியர்:
செல்வி பத்மா கந்தசாமி B.A. Geography Hons, Dip in Edu.
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# மக்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தால் படையினரின் சடலங்களை ஒப்படைப்போம்

## மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன்

மன்னார்—

தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் மீதான இராணுவத்தின் தாக்குதல்கள் தொடர்ந்தால் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரது சடலங்களைப் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்க நேரிடும் என மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதேசத்தில் நடைபெற்றுவரும் மக்கள் மீதான தாக்குதல் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மடுப்பகுதியில் இராணுவத்தினரும், ஆழ ஊடுருவும் படைப்பிரிவினரும் இணைந்து நடத்திய கிளைமோர் தாக்குதலில் இரண்டு பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவத்தினர் தமிழ்மக்கள் மீதான கொலைக் கெடுபிடிகள் வெவ்வேறு வடிவங்களில் தொடர்கின்றன. சமாதான காலங்களில் மக்கள் மீதான எண்ணற்ற தாக்குதல்களைப் பொறுத்துப் பொறுத்து இருந்தோம்.

இனியும் தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல்களை மேற்கொண்டால் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரின் சடலங்களை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் முன்னிலையில் ஒப்படைக்க நேரிடும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விழி 67 ஆவது இதழ் வெளிவந்துள்ளது

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் வெளியிடப்படும் மருத்துவ இதழான விழி 67 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

இதில் ஆசிரியர் குறிப்புடன் மனிதனின் செவி அமைப்பும் தொழில்களும், பாம்புக்கடி, காதில் சீழ் வடிதல், எயிட்ஸ் நோய், தாய்ப்பாலுக்கு இணை தரணியில் வேறெதுவுமில்லை, சிசுமரணம், காசநோயை அடையாளம் கண்டபின் புதிய நோயாளர்களுக்காக H.I.V என்பது என்ன? அது எவ்வாறு உண்மை நோய்க்குள்ளாகின்றது போன்ற மனிதனின் சுகாதாரம் தொடர்பாக கருத்துக்களுடன் வெளிவந்துள்ளது. (இ,கு)



கிளிநொச்சி - வன்னேரிக்குளத்தில் மாவீரர் பொது நூலகம் அமைப்பதற்கான காணியில் பொது மக்களால் சிரமதானப் பணி மேற்கொள்ளப்படுவதைப் படத்தில் காணலாம்.

படம் - கு.கிருஷ்ணா.

# தமிழீழ காவல்துறையினருக்கான மனித உரிமை பயிற்சிப் பட்டறை!

முழங்காவில் —

யு.என்.எச்.சி.ஆர், டென்மார்க் அகதிகள் பாதுகாப்பு நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளால் தமிழீழ காவல்துறையினருக்கான மனித உரிமைகள் பயிற்சிப்பட்டறை நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி முழங்காவில் பிரதேசத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை டென்மார்க் அகதிகள் பாதுகாப்பு நிறுவனத்தின் தலைமையகத்தைச் சேர்ந்த மனித உரிமைகள் திட்ட ஆலோசகர் கிறிஸ்காறஸ், தலைமை அதிகாரி கஸ்ரபன், யு.என்.எச்.சி.ஆர் உத்தியோகத்தர் கமிலா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ காவல்துறையின் மன்னார் மாவட்டக் கண்காணிப்பாளர் கண்ணாளன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் அறிமுகவுரையை கிறிஸ்காறஸ், கமிலா, கஸ்ரபன் ஆகியோர் நிகழ்த்தினர். இந்தப் பயிற்சி நேற்றுமுன்தினம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி - ஜெயந்திநகர் பிரதேசத்தில் குருகுல சிறுவர் தங்கக திறப்பு விழா!

கிளிநொச்சி—

கிளிநொச்சி - ஜெயந்தி நகரில் அமைந்துள்ள சிறுவர் தங்கக திறப்பு விழா கடந்த புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றது.

சமாதான நீதிவானும் குருகுல நிர்வாகத் தலைவருமான ஆ.நடராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கணேசானந்த சுவாமி, பொறியியலாளர் சுரேஸ், தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் செய்திப் பிரிவுப் பொறுப்பாளர் சங்கீதன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் வீரன் ஏற்றிவைத்தார்.

குருகுல சிறுவர் இல்லக் கொடியை குருகுல நிர்வாகச் செயலர் உமாசங்கர் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அன்னை பூபதியின் திருவுருவப்படத்துக்கான ஈகச் சுடரை தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் அதியமான் ஏற்றிவைத்தார். மலர் மாலையை திருமதி. சோமசேகரம் அணிவித்தார்.

பெயர்ப் பலகையை சாரதா இராமநாதன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

கட்டடத் தொகுதியை லண்டன் வெண்புறா நிறுவனத்தின் பணிப்பாளர் மைக்கல் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை குருகுல மாணவி நர்மதா நிகழ்த்தினார். ஆசியுரையை கணேசானந்த சுவாமி, அருட்தந்தை ஜோசப் பிரான்சிஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் கருத்துரையை திருமதி. சோமசேகரம்பிள்ளை, த. ஜெயராஜ், தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் மைக்கல் ஆகியோர் நிகழ்த்தினர்.

லண்டன் வெண்புறா நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இந்த கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (09)

# நீண்டகாலமாக புனரமைக்கப்படாத பூநகரி - பரந்தன் பிரதான வீதி!

பூநகரி—

பூநகரி - பரந்தன் வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளதால், இந்த வீதியால் போக்குவரத்து செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

பூநகரி, சாமிப்புலம், நல்லூர், ஆலங்கேணி, தம்பிராய், வாடியடி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இந்த வீதியூடாகவே போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர். ஏனைய இடங்களுக்கு வேலைக்கு செல்லும் ஊழியர்கள் நாள் தோறும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்தோடு இந்த வீதியில் கடந்த 8 மாதங்களுக்கு மேலாக பழுதடைந்த வீதி இன்று வரை புனரமைக்கப்படாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கு)

# கடற்தொழிலாளர் சமாசத்தில் கணினி கட்டட திறப்பு விழா!

வடமராட்சி கிழக்கு —

வடமராட்சி கிழக்கு - கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு ஜீ.ரி.இசற் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட கணினி கட்டடத் தொகுதி திறப்பு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கட்டடத் தொகுதி 25 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

சமாச செயலாளர் அச்சா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொருளாளர் நடராசா, வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச நெறியாளர் வெற்றிவேல் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

கட்டடத் தொகுதியை வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொது முகாமையாளர் பாலசிங்கம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் ஜீ.ரி.இசற் நிறுவனத்தால் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கணினி இயந்திரங்களும் வழங்கப்பட்டன. (கு)

# மன்னார் மாவட்டத்தில் வீதி சோதனை அதிகரிப்பு

## மக்கள் விசனம்

மன்னார்—

மன்னார் பிரதேசத்தில் இராணுவத்தினர் கடும் வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மைக்காலங்களில் இராணுவத்தினரும், பொலிஸாரும் மன்னார் நகரப்பகுதியில் சந்திகளில் குவிக்கப்பட்டு வீதியால் செல்லும் மோட்டார் சைக்கிள் உட்பட வாகனங்கள் அனைத்தும் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே போக்குவரத்து செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக தலைமன்னார் செல்லும் மக்கள் இராணுவத்தின் இந்தச் செயற்பாட்டால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அதேவேளை இந்தப் பகுதி கடற்தொழிலாளர்களும் அன்றாடம் தொழிலுக்குச் செல்லும்போது கடற்படையினரிடம் பதிந்துவிட்டே செல்ல வேண்டும். கடற்தொழிலில் ஈடுபட்டு வந்தவுடனும் கடற்படையினரிடம் பதிவை உறுதிப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறாக கடற்படையினரின் இந்தச் செயற்பாட்டால் மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர். (கு)

## சின்னஞ்சிறு செய்திகள்

### உலர் உணவு நிவாரண அட்டை மீளாய்வு!

கண்டாவளை—

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்த மக்கள் உலர் உணவு நிவாரண அட்டைகள் மீளாய்வு கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள அந்தந்தக் கிராம அலுவலகர் அலுவலகங்களில் நேற்றுமுன்தினம் காலை தொடக்கம் மாலை வரை நடைபெற்றது. (கு)

### குடிசன தொகை மதிப்பீடு

முல்லைத்தீவு—

தமிழீழ நிர்வாக சேவையினரால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் குடிசனத்தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த மாவட்டங்களில் கடந்த காலங்களில் சீரான மதிப்பீடு இன்மையால் தமிழீழ நிர்வாக சேவையின் புள்ளிவிபர பகுதியினரால் இந்த குடிசனத்தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்படவிருக்கிறது. (கு)

### களமுனை போராளிகளுக்கு உலர் உணவுப் பொருட்கள்!

வவுனியா—

வவுனியா - சன்னாசி பரந்தன் மக்கள், வவுனியா கட்டளைப் பணியக போராளிகளைச் சந்தித்து உலர் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புளியங்குள பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் இந்திரன் தலைமையில் சென்ற மக்கள் களமுனை போராளிகளையும், பொறுப்பாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், உலர் உணவுப் பொருட்களையும் வழங்கியுள்ளனர். (கு)

### கரைவலைத் தொகுதி வழங்கல்

வடமராட்சி கிழக்கு —

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்களுக்கு வேல்ட் விசன் நிறுவனத்தால் கரைவலைத் தொகுதிகள் வழங்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் வைத்து "வேல்ட் விசன்" நிறுவனத்தால் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இந்த உபகரணங்கள் 15 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. (கு)

# தமிழீழ கட்டுமான பொறியியற் செயலகத்தில் தொழிற்துறையினர் பதிவுகளை மேற்கொள்ளவும்

கிளிநொச்சி—

தாயகப் பிரதேசத்தில் கட்டுமானத் துறையில் ஈடுபடும் மேசன், தச்சர், வர்ணம் பூசுனர், மின்னிணைப்பாளர், மின் ஒட்டுநர், நீர்க்குழாய் இணைப்பாளர் போன்றோருக்கு தமிழீழ கட்டுமானப் பொறியியற் செயலகத்தால் பதிவுகளை மேற்கொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி, பூநகரி, கரைச்சிப் பிரதேச உப பணிமனை மற்றும் ஸ்கந்தபுரம் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்கள் ஊடாகப் பதிவுகளை கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் தாயக கட்டுமானத் துறையில் பங்குபற்றும் அனைத்து தொழிலாளர்களையும் தங்களை தொழிற் பதிவுக்குட்படுத்தி, தங்களது தொழிற் தகைமையை இலகுபடுத்திக் கொள்ளுமாறு தமிழீழ கட்டுமானப் பொறியியற் செயலகத்தால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுமானத் துறையில் ஈடுபடும் சகல தொழிற்துறை தொழிலாளர்களும் தமது பதிவை மேற்கொள்வதால் இனம் காண்பதற்காகவும், அவர்களின் தொழிற்திறனை விருத்தி செய்வதற்காகவும் தொழிற்தேர்ச்சி அடிப்படையில் உரிமம் வழங்குவதாகவும் புதிய தொழிலாளர்களை உருவாக்குதல் போன்ற செயற்திட்டங்களை உள்ளடக்கி செயலகம் கட்டட நிர்மாணத்துறை தொழிலாளர்களின் நலன் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

அந்தணர் என்போர் அறவோர் மற்றுஎவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டுஒழுக லான்.

- திருக்குறள்

## நமது நோக்கு

# குழப்புவது யார் ?

விடுதலைப் புலிகள் சமாதானத்தைக் குழப்புவதாக - அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன - நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் குற்றம் சாட்டியிருந்தார்.

சமாதானத்தைக் குழப்புவது யார் என்பதைப் பார்க்க முன்னர் - சமாதான முயற்சிகளுக்கு விரோதமாகக் கருத்து வெளியிடுவதாக பாலித கொகன்ன மீது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே நடவடிக்கை எடுக்க விருப்பதாக ஒரு தகவல் உள்ளது.

இப்படிப்பட்டதொரு நிலையில் - புலிகளே சமாதானத்தைக் குழப்புவதாக அவர் கூறியிருப்பது எந்தவகையில் நியாயபூர்வமானதெனத் தெரியவில்லை.

நாளாந்தம் கொலைகள், தாக்குதல்கள், இராணுவ நெருக்குவாரங்கள் தீவிரமடைந்து நாடு யுத்தத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இந்தநிலைக்கு தனியே புலிகள் மீது குற்றம் சாட்டிவிட்டு ஒதுங்கிவிடலாம் என அரசாங்கம் ஒருபோதும் மனப்பால் குடிக்க முடியாது. ஏனெனில், ஜெனிவா பேச்சுக்களுக்கு புலிகள் செல்லமுடியாத நிலையை உருவாக்கியதும் அரசுதான் - இப்போது தாக்குதல்கள் தொடர்வதற்கு காரணமும் அரசுதான்.

ஜெனிவா இணக்கப்பாட்டை அரசாங்கம் இதயசுத்தியோடு நடைமுறைப்படுத்தியிருந்தால் இந்தநிலை ஒருபோதும் ஏற்பட்டிருக்காது.

ஜெனிவா பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே புலிகள் மீது தொடங்கப்பட்ட தாக்குதல் தொடர்ந்துகொண்டிருந்த அதேவேளை - ஒட்டுக்குழுக்களின் கொலைகள் திருமலை தமிழ்மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் படுகொலையுடன் உச்சக்கட்டத்தை அடைந்தது.

இதன்விளைவாகவே படையினர் மீதான தாக்குதல்கள் மீளவும் இடம்பெறத் தொடங்கியுள்ளன என்பதில் சந்தேகம் இல்லை.

விக்னேஸ்வரன் படுகொலை வரை கைகட்டிப் பார்த்து நின்ற தமிழர் தரப்பு அதற்கு மேலும் எப்படிப் பொறுத்திருக்கும் என அரசாங்கம் கணக்குப்போட்டதோ தெரியவில்லை.

மேலும் - அடுக்கடுக்கான படுகொலைகளை நிறுத்திவிட்டு - துணை ஆயுதக்குழுக்களுக்கு அரசியல் கட்சி அங்கீகாரம் வழங்கி ஆட்டம்போட வைத்து அரசாங்கம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த நிலையில்தான் ஜெனிவா பேச்சுக்களுக்குச் செல்வதில் என்ன பயன் என்று புலிகள் சிந்திக்க நேரிட்டது.

அதன் விளைவாக தமிழர் தாயகத்தில் இயல்புநிலை உருவாக்கிய நிலையில்தான் பேச முடியும் என்றும் - தளபதிகளோடு கலந்துரையாடியே பேச்சுக்குச் செல்ல முடியும் என்றும் புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டதுதான் -

புலிகள் சமாதானத்தைக் குழப்புவதாக அரசாங்கத்துக்குத் தெரிகிறதுபோலும்.

தமிழ்மக்களை கொத்துக் கொத்தாகக் கொன்று ஊழித்தாண்டவமாடும் தனது படைகளும், துணை ஆயுதக் குழுக்களும் செய்யும் சமாதான விரோதச் செயல்கள் அரசுக்கு தெரியாமல் போய்விட்டது.

தமிழர் தாயகத்தில் இயல்புநிலை ஏற்படுத்தப்பட்டால்தான் ஜெனிவா பேச்சுக்கு வரமுடியும் என்ற நிலைப்பாட்டில் இருந்து புலிகள் ஒருபோதும் விலகப்போவதில்லை.

கிழக்குத் தளபதிகளுக்கு ஹெலி வசதி வழங்கினால் கூட அவர்கள் தமது தலைமைக்கு அங்கு நிலவும் அச்சமான சூழலையே விபரிப்பர். அது நிச்சயம் ஜெனிவா பேச்சுக்குச் செல்வதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுக்கப் போவதில்லை.

எனவே, சமாதானம் சீர்குலைக்கப்படுவதாக அரசு கருதுமேயானால் தனது படைகளின் தாக்குதல்களையும், கொலைகளையும் தடுத்துநிறுத்த உடனடி நடவடிக்கை எடுப்பதே பொருத்தம்.

நாளாந்தம் தமிழ்மக்களைக் கொன்று பசியாறிக் கொண்டும் - பொதுமக்கள் மீது கிளைமோர் தாக்குதல்களை நடத்திக்கொண்டும் அரச படைகள் சமாதானத்தைச் சீர்குலைக்கின்ற நிலையில், புலிகள் மீது அரசு குற்றம் சாட்டுகிறது.

புலிகள் மீது குற்றம் சாட்டிக்கொண்டிருக்கும் அரசு முதலில் தனது பக்கமிருக்கும் பிரச்சினையை தீர்க்கத் தவறிவிட்டது.

சமாதான சூழல் உருவாக்கப்படுவது முற்றுமுழுதாக அரசின் கையில் இருக்கிறதே தவிர புலிகளிடத்தில் இல்லை என்பதே யதார்த்தம்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# கோழிப் பண்ணையாளர்களை உடன் பதிவு செய்ய கோரிக்கை

சுதுமலை —

சன்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோழிப்பண்ணையாளர்கள் உடனடியாக தங்களது பண்ணை விபரங்களை பிரதேச செயலகத்திலே அல்லது வலிதென் மேற்கு பிரதேச சபையிலோ பதிவு செய்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு அந்தப்பகுதி கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

உலகை பீதிக்குள்ளாக்கி வரும் பறவைக் காச்சல் நோய் பரவும் அபாயம் காரணமாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் கோழி வளர்ப்பில் ஈடுபடுவோர் கோழிகள் இறந்தால் அல்லது பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக தமக்கு அறிவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டதுடன் ஏதாவது அசம்பாவிதங்களால் கோழிகள் அழிவடையுமாயின் அதற்கான நட்ட ஈட்டைப் பெற வேண்டுமாயின் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

பறவைக்காய்ச்சல் நோயானது வைரஸ் கிருமியால் உருவாகின்றது. பறவைகளின் எச்சம் மூலம் ஏனைய பறவைகளுக்கு பரவுகிறது. நோயின் அறிகுறிகளாக வாய், மூக்கு போன்றவற்றில் இருந்து சளி வடியும் முகம் வீங்கிக் காணப்படும், தொண்டை, பாதம் போன்ற நீல நிறமாகக் காணப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (44)

# கடற்தொழில் சமாசத்தில் கணினி அறை திறப்பு

தாளையடி —

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஜீ.ரி.இசற்) உதவியுடன் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தால் அமைக்கப்பட்ட குளிரூட்டி அறைத் தொகுதியின் ஒரு பகுதியில் கணனி அறை கடந்த வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

சமாசச் செயலாளர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - மங்கள விளக்கை சமாச இயக்குநர் சபை உறுப்பினர்கள் செ.வெற்றிவேல், யா.சிமியான்பிள்ளை ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

சமாசப் பொதுமுகாமையாளர் த.பாலசிங்கம் கணனி அறையை நாடாவை வெட்டித் திறந்துவைக்க சமாசப் பொருளாளர் க.நடராசா கணனியை இயக்கி வைத்தார்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் (ஜீ.ரி.இசற்), ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் (யூ.என்.டி.பி), கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களம் ஆகியன தலா ஒவ்வொரு கணனியை சமாசத்துக்கு வழங்கியிருந்தனர்.

இந்த நிகழ்வில் சமாசப் பணியாளர்கள் அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (21)

# மின் பிறப்பாக்கிகள் வழங்கப்பட்டன

மானிப்பாய் —

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மூன்று நலன்புரி நிலையங்களுக்கு மின்பிறப்பாக்கிகள் வழங்கப்பட்டன.

பொன்னாலை, சங்கானை நீதிவான், சங்கானை ஓடக்கரை ஆகிய மூன்று நலன்புரி நிலையங்களுக்குமே மின்பிறப்பாக்கிகள் வழங்கப்பட்டன.

இந்த மூன்று நலன்புரி நிலையங்களிலுமுள்ள மாணவர்கள் இரவு நேரங்களில் கல்வி கற்பதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இந்தநிலையில் வலி.மேற்கு பிரதேச செயலர் ஏ.மோகன்றாஸின் முயற்சியினால் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் இந்த மின்பிறப்பாக்கிகளை வழங்கியுள்ளார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### இணைப்பாளராக நியமனம்

தாளையடி —

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் உபதலைவரும் தேசிய தலைமையக ஆளுனர் சபை உறுப்பினருமாகிய கு.பாலகிருஷ்ணன் வடக்கு - கிழக்கு இணைப்பாளராக கொழும்பு தேசிய தலைமையகத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக இவர் நியமிக்கப்பட்டமைக்கு அண்மையில் நடைபெற்ற இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் ஆளுனர் சபைக் கூட்டத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. (21)

### சிரமதானம்

மானிப்பாய் —

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மானிப்பாய் சுகாதாரப் பகுதியினர் டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி வீதிகளையும் பொது இடங்களையும் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யவுள்ளனர்.

இந்த மாதம் 24 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை அனுஸ்டிக்கப்படவுள்ள டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி மானிப்பாய் சுகாதாரப் பகுதியினரும் பொது அமைப்புகளுடன் இணைந்து மானிப்பாய் பகுதியை சிரமதானம் மூலம் துப்பரவு செய்யத் திட்டமிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சுவிசேஷ ஆராதனைகள்

சுண்டிக்குளி —

இலங்கை பெந்தகொஸ்தே சபையின் வருடாந்த கன்வென்ஷனும் சுவிசேஷ ஆராதனைகளும் எதிர்வரும் புதன்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை இலங்கை பெந்தகொஸ்தே சபை கண்டி வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆராதனைகளில் தினமும் 7 மணிக்கு வேதபாடமும், 9 மணிக்கு ஆராதனையும், மாலை 2 மணிக்கு பரிசுத்தாவியின் கூட்டமும் இடம்பெறவுள்ளதால் இலங்கை பெந்தகொஸ்தே சபையினர் அறிவித்துள்ளனர். (58)

# தனியார் கல்வி நிலையத்தில் இப்படியும் தண்டனையா?

## வாசகர் நோக்கு

கடந்த 9 ஆம் திகதி (ஞாயிறு) மாலை 3 மணியளவில் வடமராட்சிப் பகுதியில் உள்ள வீதியொன்றினூடாக நான் பயணித்துக்கொண்டிருந்தவேளை, என் கண்களுக்கு அகப்பட்ட சம்பவமொன்றை இந்தப் பகுதியூடாக வெளிக்கொணர விரும்புகிறேன்.

மேற்குறித்த வீதியில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றின் முன்பாக மூன்று மாணவர்கள் கொடூரமான கொளுத்தும் வெய்யிலின் மத்தியில் முழங் காலில் நிற்க அதைச்சுற்றி சிறு சனக்கூட்டம் காணப்பட்டது. விடயத்தை அறிய நானும் அவ்விடத்தில் நின்றோருடன் இணைந்து கொண்டேன்.

குறித்த அந்த தனியார் கல்வி நிலையத்தில் மாணவர்கள் மூவரும் செய்த சிறு தவறு ஒன்றுக்காக தண்டனை வழங்கப்பட்ட முறையே அதுவாகும்.

இந்தத் தண்டனை முறையை நாம் எந்த வகையில் அடக்கிக் கொள்ளமுடியும். மாணவர்கள் செய்யும் சிறு தவறுகளுக்கு வீதியில் நிற்கவைப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய தண்டனை முறையா?

வீதியில் வேகமாமக வரும் வாகனங்கள் சிலவேளைகளில் அந்த மாணவர்களை முட்டி மோதிவிட்டுச் சென்றிருந்தால் அல்லது எதிர்பாராமல் அந்த மாணவர்களுக்கு ஏதும் நடந்திருந்தால் அவர்களது பெற்றோருக்கு யாது கூறமுடியும்?

இரும்பு மனம் படைத்த இந்த ஆசிரியருக்கு மாணவர்களை வீதியில் நிற்கவைப்பதுதான் பொருத்தமான தண்டனையாக முதலில் தெரிந்திருக்கிறது.

கல்வி உளவியல், கல்வி சமூகவியல், கல்வித் தத்துவம், கல்விக் கோட்பாடுகள் என்றெல்லாம் பெயரளவில் மட்டும் படித்துவிட்டுத்தான் இந்தத் தண்டனையை வழங்க முயற்சித்தாரா? அல்லது இவற்றைப்பற்றி கற்காத ஆசிரியரா? எந்த வகை தெரியவில்லை.

இவரைப்போன்ற ஒருசில ஆசிரியர்கள் வழங்கும் பொருத்தமற்ற கீழ்த்தரமான தண்டனை முறைகள் காலப்போக்கில் பாரிய விளைவுகளை மாணவர்களிடத்தில் ஏற்படுத்திவிடும். மாணவனது எதிர்கால வளர்ச்சிக்கு அந்த தண்டனைகள் தடையாகவும் அமைந்துவிடும்.

எனவே எந்தவொரு ஆசிரியரும் இவரைப் போன்று பொருத்தமற்ற தண்டனை முறைகளை வழங்க முயற்சிக்காது மாணவருக்கு பொருத்தமான தண்டனைகளை வழங்கவேண்டும் என ஆசிரியர் சமூகம் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நிமலன்.

**தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான சர்வதேச நாடுகளின் தடைகளுக்கு புலம் பெயர் வாழ் தமிழர்களின் பிரசார பலவீனம் தான் காரணம் என அவுஸ்ரேலிய இன்பத் தமிழ் வானொலியின் செய்திக்குவியல் நிகழ்ச்சியில் பேராசிரியர் கா.சிவத்தம்பி வெளிப் படுத்திய கருத்துக்கள்.**

# கனடாவில் புலிகள் மீதான தடைக்கு பிரசார பலவீனமே காரணம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நகர்வுகள் ஒவ்வொன்றிலும் புலம்பெயர் வாழ் தமிழர்களின் பாரிய ஒத்துழைப்பை எவருமே மறுப்பதற்கில்லை. புலம் பெயர் வாழ் தமிழர்கள் மீதான தமிழீழ தேசியத் தலைமையினதும் மதிப்பை புலம் பெயர்வாழ் தமிழீழ மக்கள் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

இருப்பினும் தனி நபர்களினது பங்களிப் புகளாக இருப்பதனூடே மட்டும் விடுதலைப் போராட்டத்தை நகர்த்திவிட முடி யாது.

தமிழீழ தேசவிடுதலைப் போராட்டம் சர்வ தேச மயப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேசத்தின் நியாயக் கோட்பாடுகளுக் கும் நிர்பந்தங்களுக்குள்ளும் உள்ளாகி உள்ளது.

சிங்களவர்களோடு மட்டுமே நாம் போரா டிக் கொண்டிருந்தால் போதுமெனில் எந்த ஒரு தமிழீழ குடிமகனும் அந்நிய தேசத்தில் அக தியாக இத்தனை காலம் வாழ்ந்திருக்க வேண் டியதில்லை. நம் காணிகள் செழித் திருக்க- நம் முன்னையர் காலம் மீண்டும் பூத்திருக்க சுதந் திரத் தமிழனாய் திருமலை கோணேஸ்வரர் ஆலயத்துக்கும், நல்லூர் கந்தன் கோவிலுக் கும் பங்குனி உத்திர பாத யாத்திரையும் போய்க் கொண்டிருப்போம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இப்போது தமிழீழ விடுதலைப் போராட்டம் முதிர்வடைந்து சர்வதேசத்தின் முன்னால் நிற்கிறது. அதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

சமாதானம் அமைதிப் பேச்சுக்கள் என்ற அழுத்தங்களினூடே தமிழீழ விடுதலைப் போராட்டம் நகர்ந்து கொண்டிருக்கிற வேளை யில் தாயகத்தில் நமக்கிருக்கிற வலிமை சர்வதேச தளத்திலும் இருக்க வேண்டும்.

அதைப் புலம் பெயர் தமிழர்களால் மட் டுமே செய்ய முடியும்.

உயிரைக் கொடுத்த மாவீரர்களுக்கு, உயி ரைக் கொடுக்க உள்ள போராளிகளுக்கு உந்து சக்தியாக - உயிரோட்டமாக புலம் பெயர் தமி ழர்கள் தான் இருக்கிறார்கள்.

கொட்டும் பனியிலும், உறங்கா இரவுகளி லும் கடன்பட்டு செந்நீரைப் போல் உடல் உழைப் பைச் சிந்தி அள்ளி அள்ளி கொடுத்து அரும்பாடு பட்டு வளர்த்த விடுதலைப் பயிரின் அறுவடைக்கு முன்னராக புலம் பெயர் தமிழர்களின் பரப் புரை பலவீனம் எனும் களை இருக்கிறது தான்




என்பது புலம்பெயர் தமிழரது மனசாட்சிக்குத் தெரியும்.

இந்தக் களைக்கு யார் காரணம் என்பது விவாதிக்கப்பட வேண்டியது அல்ல.

களையைக் களைந்து கதிர் முற்ற மகிழ் வோடு அதனை அறுத்து ஒன்றாய் நின்று விடு தலைப் பொங்கலிடுவதற்கான வழி என்ன என்பதைத்தான் புலம் பெயர் தமிழர் செய்ய வேண்டும்.

ஐரோப்பிய பயணத் தடைக்கான காரணம் பேச்சுவார்த்தை தொடர்பிலானதும், இலங்கை அரசாங்கத்தினது பரப்புரைகள் அல்லது எடுத் துரைப்புக்களுக்கான சந்தர்ப்பங்களாலும் ஏற் பட்டது எனக் கருதலாம். அதிலும் நோர்வே போன்றவற்றில் இது விடயத்தில் ஒரு தளர்ச்சி உள்ளது. அதனால் நோர்வேத் தரப்பை சிங் களத் தரப்பு கடுமையாகத் தாக்குகிறார்கள்.

கடந்த சில நாட்களாக நடைபெற்று வரும் சம்பவங்களைப் பார்க்கும் போது-

நோர்வே அல்லது மூன்றாவது நாடாக ஒரு மேற்கத்தைய நாட்டின் தலையீடு இல்லாமல் அனுசரணை இல்லாமல் சமாதானம் நடை பெறுவதற்கான சாத்தியம் இல்லை என்ற உண்மையும்

அப்படியான நேரத்தில் நோர் வேயை வேண் டாம் என்று சொல்வது எப்படித் புத்திசாலித் தனமாகும் என்று சிங்கள மக்களைச் சிந்திக்க வைக்கிற ஒரு சந்தர்ப்பமாக பார்க்கிறேன். இலங் கையில் தமிழரது நிலைப்பாடு பற்றி வெளிநாடு களில் எடுத்துச் சொல்லப்பட்டு வந்த சிலபரப் புரைகள் தான் கனேடியத் தடைக்கு காரணம்.

குறிப்பாக சர்வதேச நிறுவனங்களிடத்தில் தமிழர் தரப்பானது நன்மதிப்பைப் பெறுவதற் கான பரப்புரைகளைப் புகலிடத் தமிழர்கள் வேண்டிய அளவு செய்யவில்லை. அதற்கு மாறான செயற்பாடுகளையே செய்துவந்துள்ள தாக எமக்குப்படுகிறது.

கனேடியத் தடையை விதித்தது ஒரு கன்சர் வேட்டிவ் கட்சி. அரசாங் கத்துக்கு வந்தும் சிறு பான்மை அரசாங்கமா கவே இருக்கிறது. கனே டியப் பண்பை பாதுகாப் பாகச் சொல்கிறார்கள்.



தமிழ் உரிமைப் போராட்டம் பற்றிய ஒரு கருத்தாதரவு தேடும் கூடம் - கருத்தாதரவு தேடுகிற ஒரு தொழில் முறையாளர்களை - மருத்துவர்கள், பொறி யியலாளர்கள், வல்லு நர்களைக் கொண்ட குழுமம் கனடாவில் இயங்கவில்லை.'

தமிழ் மக்களால் சிங்கள மக்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படு கின்றன என்று கனேடிய அரசாங்கத்திடம் சொல்வதற்கான வலுவான சிங்களக் குழு கனடாவில் உண்டு.

கனடாவில் LOBBY எனச் சொல்லப்படுகிற கருத்தாதரவு தேடும் குழுமம் ஒன்று உள்ளதா?

இங்கிலாந்தில் ஒரு காலத்தில் இருந்தது- இப்போது அங்கும் குறைந்து விட்டது. அவுஸ் ரேலியாவிலும் கூட இல்லை என்று தான் நம்புகிறேன்.

தமிழர் உரிமைப் போராட்டம் தொடர்பாக புலம் பெயர் தமிழர்கள் தங்களை ஒழுங்குப் படுத்திக் கொள்வதில் காணப்படுகிற பலவீனங் களின் வெளிப்பாடாகவும், குறைபாடுகளின் வெளிப்பாடாகவுமே கனேடியத் தடையை நான் பார்க்கிறேன்.

புலம் பெயர் வாழ் நாடுகளில் உள்ளவர்கள் சரியான வகையில் இந்தப் பரப்புரையை அங் குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், அர சாங்கங்களிலும் நியாயப்பாடுகளை வெளிக் கொணரத் தவறிவிட் டார்கள் என்று அடித் துச் சொல்கிறேன்.

அவுஸ்ரேலியாவில், நீங்கள் வசிக்கும் மா நிலத்தில் உள்ள பிர தான தேசிய நாளித ழில் இலங்கைத் தமி ழர் உரிமைப் போரா ட்டம் பற்றி எத்தனை அங்குலச் செய்தி கட ந்த 6 மாத காலத்தில் வெளியாகியிருக் கின்றது?

ஒன்று கூடவர வில்லை என்று நீங் கள் கூறுகின்றீர்கள். அப்படியானால் நீங் கள் என்னுடன் பேச வேண்டியதும் இல்லை. என்னைப் போன்ற அப்பாவிகளைப் பிடித்து ஏன் கேள்வி கேட்க வேண்டும்?

இங்கிலாந்து - கனடா - ஐரோப்பாவில் உள்ள புலம்பெயர் தமிழர்களைவிட, அவுஸ் ரேலியாவில் உள்ள தமிழர்கள் ஆங்கிலம் படித்தவர்கள் - அடி நிலை ஊழியராக இருந்தா லும் அரச உத்தியோகத்தில் இருப்பவர்கள். உங்களால் இதை ஏன் செய்ய முடியவில்லை? அவர்களைப் போல நீங்கள் உடல் உழைப் பாளர்கள் அல்ல என்பதை நான் நன்கறி வேன்.

உங்களுக்குள் குழு மோதல்களை ஏற் படுத்திக் கொண்டு, இரண்டு வருடத்துக்கு ஒரு முறை இங்கு வந்துவிட்டு மகிழ்கின்றீர்கள்.

கோவில்களுக்குச் செலவிடுவது போன்ற உங்களது சொந்த ஆத்மார்த்த திருப்திக்கான செயற்பாடுகளைப் போல் இந்த கருத்தாதரவு தேடுதல் எனப்படுகிற LOBBY யை ஏன் நீங்கள் செய்யவில்லை?

யார் தலைவர் - செயலாளர் என்ற வகை யிலும், யார் பூனைக்கு மணி கட்டுவது என்ற வகையிலும் அங்கு நிலைமைகள் இருப்பதாகக் கூறுகின்றீர்கள்.

நீங்கள் மாநாடுகள் - பட்டிமன்றங்கள் - கருத்தரங்குகள் குத்துவிளக்கேற்றுதல்களை செய்வதற்குத்தான் இவை தேவை.

அதைவிட எல்லா விடயமும் நன்கு அறிந்த 4 பேர் இணைந்து இந்த Lobby யைச் செய்ய லாமே.

உண்மையில் LOBBY செய்வதற்கான ஒழுங்கு முறைகளை நீங்கள் அறிந்திருக்க வில்லை என்பது துரதிர்ஸ்டம். LOBBY அறிந்த வர்களும் அதைச் செய்யவில்லை என்பதும் உண்மை. அப்படியான நிலையில் தடை விதித்து விட்டார்கள் என்று வயிற்றிலடித்துக் கொண்டால் எப்படி?

இங்குள்ள தமிழர்கள் புலம் பெயர் தமிழர்களிடம் நிறைய எதிர் பார்க்கின்றனர். இங்குள்ள தமிழர்களால் எதுவும் செய்ய முடியாது. நிலைமை அப்படி உள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை கால வரிசைப்படியாக நீங்கள் வெளியீட் டுள்ளீர்களா? அப்படி இருந்தால் அது எவ்வளவு தூரம் சென்றடைந்திக்கின்றது? வீடுகளில் எழுதிவைத்துக் கொண்டால் போதுமா?

இந்த விடயங்களைச் செய்வதற்கு எல்லோ ரும் இணைய வேண்டும் என்பதில்லை.

சிறிது பேர் இந்த விடயங்களைச் செய்ய முன்வருவார்கள். மற்றவர்கள் அவர்களுக்கு உதவ முன்வரவேண்டும். அவர்கள் மறுதலிக் கக் கூடாது.

கனடாவில் அப்படித்தான் நடந்தது என்று கேள்விப்படுகிறேன். கனடாவில் உள்ள சிலர் அவர் அப்படிச் சொல்லிவிடுவார் - இவர் எப்படிச் சொல்லிவிடுவார் என்று சொல்லிக் கொண்டு பேச விரும்புகிறவர்களையும் பேசவிடாமல் செய்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் ஒரே கிராமத்தைச் சேர்த் தவர்கள் அங்கு ஒன்றுபட்டுத்தான் இருக்கின்றீர் கள். பக்கத்து கிராமத்துக்காரன் சண்டை போட்டால் அங்கேயும் நீங்கள் ஒன்றாக இணை ந்து கொண்டு சண்டை போடுகின்றீர்கள். அந்த ஒற்றுமை எல்லாம் உங்களிடம் இருக்கிறது.

ஆனால், ஒட்டுமொத்தமாக இலங்கைத் தமிழர் உரிமைப் போராட்ட விடயத்தில் ஒன்று பட்டு நிற்க வேண்டும். அதுதான் பிரச்சினையே.

இன்றுள்ள இலங்கை யாப்பு நிலையில் ஒரு தேசத்தின் அலகு என்ற வகையில் தேசக் குழுமம் என்ற வகையில் ஆட்சியில் தமிழர்க ளினது பங்கு என்ன? என்பது வரைவிலக் கணப்படுத்தப்படவில்லை.

சிங்களவன் சொன்னதற்குப் பின்னர்தானே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று தமிழ்ப் பத்திரிகைகள் வலிந்து எழுதுகின்றார்கள்.

விடுதலைப்புலிகளைக் காரணம் காட்டிக் கொண்டு சிலர் செயற்படுகின்றனர்.

அவர்களுக்கு நான் சொல்வது இலங்கைத் தமிழர் உரிமைப் போராட்டத்துக்கு விடுதலைப் புலிகள் தலைமை தாங்க வேண்டிய நிர்ப்பந்தச் சூழல்களை நீங்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

முதலில் இதை இலங்கைத் தமிழரது உரி மைப் போராட்டமாகத் தான் நாம் பார்க்க வேண் டும் என்று நான் வலியுறுத்துகின்றேன்.

நீங்கள் புலிகள் பக்கமா? எதிராக நிற்கிறீர் களா? என்பது அல்ல.

நீங்கள் வாழ்கின்ற புலம் பெயர் நாடுகளில் உள்ள வாழ்க்கை முறைக்கும், இங்குள்ள தமிழர்களது வாழ்க்கை முறைக்கும் வேறுபாடு உண்டு.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு மரு மகன் புறப்பட்டு விட்டான், பேரன் புறப்பட்டு விட் டான் எனில் அவன் கொழும்பு வந்து சேருவானா இல்லையா என்ற பிரச்சினை ஒரு தரப்புக்கு மட்டுமேயானது அல்ல. எல்லோருக்கும் பொது வானது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது -

'வேரோடு கோபித்துக் கொண்டு கிளைகள் வெள்ளத்தில் போயின' என்ற உவமையைத் தான் இங்கே சொல்ல வேண்டும்.

---

விய புது வருடம் உங்களுக்கு எப்படி?

## மீனம்



**பூரட்டாதி 4 ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி**

மீனராசி அன்பர்களுக்கு வருட ஆரம்பத் தில் லக்கினாதிபதியாகிய குருபகவான் அட்ட மத்தில் சஞ்சரிக்கிறார். பணவிஷயங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எடுக்கும் முயற்சிகளில் இடையூறுகள் காட் டும். சனியும் 5ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் எந்த விஷயத்தையும் நன்கு சிந்தித்துச் செயற்பட வேண்டும். கொடுக்கல் வாங்கல்களில் பிரச் சினை தோன்றும். பிரயாணங்கள் அலைச் சலை உண்டாக்கும். தேவையற்ற பிரச் சினைகள் வந்து சேரும். வாகனம் செலுத்து வோர் விபத்துக்கள் பற்றி அவதானமாக இருத்தல் நன்று. தேகசுகம் பாதிப்படைவதால் வைத்தியச் செலவும் அதிகரிக்கவே செய்யும்.

மேலும் இராகு கேது 1ஆம், 7ஆம் இரா சிகளில் சஞ்சரிப்பதால் குடும்ப வாழ்க்கையில் இனிமை குறையும் பிள்ளைகளால் மனச் சஞ் சலம் உண்டாகும். திருமண சுபகருமங்கள் இழுபறி நிலையைக் காட்டும்.

28.10.2006இன் மேல் குருபகவான் 9ஆம் இராசியில் சஞ்சரிப்பதால் பலமுன் னேற்றமான பலன்கள் தென்படும். இதுவரை இருந்த இடையூறுகள் யாவும் நீங்கிவிடும். உடல் நலம் சிறப்பாக இருக்கும். பொருளா தாரம் சிறப்படையும். கடன்கள் இருந்தால் அவையாவும் நிவர்த்தியாகும். குடும்ப நிலை யும் சிறப்படையும். புதிய வீடு, வாகனம் கைகூட இடமுண்டு. பெரிய மனிதர்களின் ஆதரவு உண்டாகும். பிரயாண யோகங்களும் ஏற் படும். தடைப்பட்ட சுபகருமங்கள் கைகூடி மகி ழ்ச்சியைத் தரும். உறவினர், நண்பர்களின் உதவியும் கைகூடும். செல்வாக்கும், புகழும் கைகூடக் கூடியதாக இருக்கும். புத்திரர்களால் உதவிகள் உண்டு. வெளிநாட்டுத் தொடர் புகள் அதிகரிக்கும் வீட்டில் சுபநிகழ்வுகள் கைகூடி வீடு கலகலப்பாக இருக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு வருடத்தொடக் கம் சிறப்பாக இல்லை. பலவித சோதனைகளை யும், அதிகாரிகளின் கெடிபிடிகளையும் சமா ளிக்க வேண்டியிருக்கும். பதவி உயர்வுகள் பின்தள்ளிப் போகும். புதிய வேலை வாய்ப் புகள் கைகூடாது. 28.10.2006 இன் மேல் எல்லாவற்றையும் சமாளித்து வீறு நடைபோட லாம். மறைமுக எதிர்ப்புக்கள் மறைந்து விடும். வேலைப்பளு குறைந்து தொழில் சிறப் படையும். மதிப்பும் கௌரவமும் அதிகரிக்கும். பதவி உயர்வுகள் கிட்டும். லாபமும், சிறப்பும் உண்டாகும். புதிய வேலை வாய்ப்புகள் வந்து சேரும்.

வர்த்தகர்களுக்கு வருட முற்பகுதி பண விஷயத்தில் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். எந்த முயற்சி எடுத்தாலும் இடை யூறுகள் ஏற்படும். முதலீடுகள் தேங்கிக் கிடக் கும். சிலருக்கு வழக்கு வம்புகளும் வந்து சேரும். நிதி பற்றாக்குறை இருந்து கொண்டி ருக்கும். பொருளாதார நெருக்கடிகளால் கடன் களும் வந்து சேரும். 28.10.2006 இன் பின் படிப்படியாக முன்னேற்றத்தைக் காணலாம். போட்டி, பொறாமைகள் நீங்கிவிடும். பொருளா தாரம் சிறக்கும். வங்கி உதவிகளும் கிடைக் கும். பழைய கடன்கள் நேர்செய்து விட முடியும். கூட்டுத் தொழிலில் முன்பிருந்த மன வேறுபாடு நீங்கும். புதிய முதலீடுகள் நல்ல லாபத்தை தரும்.

பெண்களுக்கு வருட முற்பாதி சிறப்புக் குறைவாகவே இருக்கும். சிறு சிறு சோத னைகள் ஏற்படலாம். மனநிம்மதி குறையும். திருமண காரியங்கள் தடைப்படும். குடும்ப சுகக் குறைவு ஏற்படும். வருட பிற்பாதியில் கஷ்டபலன்கள் நீங்கி எல்லாம் வெற்றியாக அமையும். குடும்ப சுகம் சிறப்பாக இருக்கும். வைத்தியச் செலவுகள் நீங்கும் தடைப்பட்ட திருமணங்கள் கை கூடும். பொருளாதார நிலையும் சிறக்கும்.

மாணவர்களுக்கு கல்வி விளையாட்டு எல்லாவற்றிலும் மந்தநிலை காட்டும். உற் சாகம் குறைந்து சோம்பல்தனம் கூடும். உடம்பு சுகம் குறைவாக இருக்கும். வருடபிற் பாதியில் கஷ்டபலன்கள் குறைந்து உற்சாகம் உண்டாகும். விளையாட்டுக்களில் சாதனை புரிய முடியும். கல்வி முன்னேற்றமடையும். வருட இறுதியில் பரீட்சைகளில் கூடிய புள்ளி கள் பெற வாய்ப்பாக இருக்கும்.

சி.சிதம்பரநாதக் குருக்கள்

முற்றும்.

# மூன்றாவது அரசியல் சக்தி தமிழகத்தில் உருவெடுக்குமா?

சென்னை—

அ.தி.மு.க - தி.மு.கவுக்கு மாற்று யார்? இந்தக் கேள்விக்கு இதுவரை விடை கிடைக்கவில்லை. இந்த தேர்தலிலாவது அதற்கு விடை கிடைக்குமா என்பதே அரசியல் நோக்கர்களின் எதிர்பார்ப்பு.

அ.தி.மு.க மீது கோபம் வந்தால் தி.மு.கவுக்கு; தி.மு.க மீது கோபம் வந்தால் அ.தி.மு.கவுக்கு என வாக்களிக்கும் நிலை. மக்களின் நம்பிக்கையைப் பெற அடுத்த நிலையில் உள்ள கட்சிகள் தவறியதே இதற்கு காரணம்.

ஓரிரு முறை நல்ல வாய்ப்புக் கிடைத்தும் அதைச் சரியாகப் பயன்படுத்த காங்கிரஸ் தவறிவிட்டது. மாற்றுக் கட்சியாக வளரும் வாய்ப்புகளை ம.தி.மு.கவும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. பா.ம.கவின் எல்லையோ குறுகியது.

இந்தத் தேர்தலில் புதிதாக களம் இறங்கியுள்ள நடிகர் விஜயகாந் கட்சிக்கு தி.மு .க - அ.தி.மு.கவுக்கு மாற்றாக வளரும் வாய்ப்பு உள்ளதா என்பதே இப்போதைய கேள்வி.

40 ஆண்டுகளாக தி.மு.க அதை விட்டால் அ.தி.மு.க என்ற நிலை தான். 1967 க்குப் பிறகு இவற்றுக்கு மாற்றாக வேறு கட்சி தலை எடுக்க முடியவில்லை.

எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பின் அ.தி.மு.க இரண்டாக உடைந்தது. ஜானகி, ஜெயலலிதா தலைமையில் 2 அணிகள் தேர்தலைச் சந்தித்தன. அப்போது நடைபெற்ற தேர்தலில் மூப்பனார் தலைமையில் காங்கிரஸ் 208 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டது. ராஜீவ் காந்தி தமிழகத்தில் ஊர் ஊராகப் பிரசாரம் செய்தார். காங்கிரஸுக்கு ஆதரவாக பெரிய எழுச்சி ஏற்பட்டது போன்ற தோற்றம் இருந்தது. ஆனாலும், காங்கிரஸால் 26 இடங்களை மட்டுமே பிடிக்க முடிந்தது.

1996 ஆம் ஆண்டு காங்கிரஸில் இருந்து பிரிந்த த.மா.கா.வுக்கு மற்றொரு வாய்ப்புக் கிடைத்தது. அப்போது ஜெயலலிதா அரசுக்கு எதிராக அலை வீசியது. மூப்பனார் தலைமையில் உதயமான த.மா.கா இரு கட்சிகளுக்கும் எதிராக தீவிரமாகச் செயற்பட்டிருந்தால் மூன்றாவது கட்சியாக வளர்ந்திருக்கலாம். ஆனால் அந்த வாய்ப்பையும் தவறவிட்டது.

தி.மு.கவில் இருந்து பிரிந்த ம.தி.மு.க தமிழகம் முழுவதும் பரவலாக வளர்ச்சி பெற்றிருந்தாலும் அங்கும் இங்குமாக ஊசலாட்டத்தால் மாற்றுக் கட்சியாக தலை எடுக்க முடியவில்லை.

தொடர்ந்து தி.மு.கவை எதிர்த்து அந்தக் கட்சி அரசியல் செய்திருந்தால் அ.தி.மு.க மீது சலிப்பு வரும் நிலையில் தி.மு.கவுக்கு மாற்றாக ம.தி.மு.க மீது மக்கள் பார்வை திரும்ப வாய்ப்பு இருந்தது. ஆனால் தேர்தலுக்காக அணி மாறியதால் தி.மு.க - அ.தி.மு.கவுக்கு மாற்றாக தலை எடுக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறது ம.தி.மு.க.

இந்தத் தேர்தலில் இரு அணியாக பிரிந்த நிலையில், நடிகர் விஜயகாந் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் மூன்றாவது இடத்தில் உள்ளது.

முக்கிய தலைவர்களுக்கு கூடுவதைப் போல் விஜயகாந்துக்கு நல்ல கூட்டம் கூடுகிறது. கூட்டத்தை வைத்து எதையும் நிச்சயிக்க முடியாது.

இருந்தாலும் கருத்துக் கணிப்புக்களில் கூட விஜயகாந் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்தத் தேர்தலில் விஜயகாந் 118 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்று அறுதிப் பெரும்பான்மை பெறுவாரா என்பது வேறு விடயம். ஆனால் அவரது கட்சி பெரும்பாலான தொகுதிகளில் ஓரளவு வாக்குகளைப் பெற்று 3 ஆவது இடத்தைப் பிடித்தால் அதுவே அவருக்கு பெரிய வெற்றிதான்.

மலிவான வாக்குறுதிகளை கைவிட்டு ஆக்கபூர்வமான கொள்கைகளையும், திட்டங்களையும் முன்வைக்கும் கட்சிக்கு மூன்றாவது கட்சியாக வர வாய்ப்புள்ளது.




# தமிழர்களுக்கு கருணாநிதி இதுவரை என்ன செய்தார்?

## கேள்வி எழுப்புகிறார் வைகோ



திருச்செங்கோடு—

கருணாநிதி தமிழர்களுக்குச் செய்தது என்ன என்று கேள்வி எழுப்பினார் ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ.

கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது கருணாநிதி குடும்பத்தினர் நடத்தும் உதயா தொலைக்காட்சி கன்னடர்களுக்கு ஆதரவாக செயற்பட்டது. காலமெல்லாம் தமிழைச் சொல்லியே பிழைத்த அவர்கள் தமிழர்களுக்குச் செய்தது என்ன?

ஆனால், கர்நாடகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழக முதல்வர் திரைப் படத்தில் நடிக்கும் காலத்திலேயே வாட்டாள் நாகராஜ் மிரட்டலுக்கு அடிபணியவில்லை. தமிழ் ஒழிக என்று சொல்லவில்லை.

எம்.ஜி.ஆர் இருந்தபோது மக்களவைத் தேர்தலில் மோசமாகத் தோற்றார். அடுத்த சில மாதங்களில் வந்த சட்டசபைத் தேர்தலில் அமோக வெற்றிபெற்று ஆட்சி அமைத்தார். அந்தச் சரித்திரம் தற்போது திரும்புகிறது என்றார் வைகோ.

# தேர்தலின் கதாநாயகன் தி.மு.கவின் அறிக்கையாம்

## என்கிறார் சிதம்பரம்



பூந்தமல்லி—

தி.மு.கவின் தேர்தல் அறிக்கை தான் இந்தத் தேர்தலின் கதாநாயகன் என மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசியதாவது -

கடந்த 5 ஆண்டுகளில் 3 ஆண்டுகளாக ஜெயலலிதா சர்வாதிகார ஆட்சி நடத்தி வந்தார். அதனால் நாடாளுமன்றத் தேர்தலில் அவருக்கு எதிராக தமிழக மக்கள் வாக்களித்தனர். அதன் பிறகு அ.தி.மு.கவுக்கு பின்னடைவுதான். ஆனாலும் அவர் தொடர்ந்து முதலமச்சராக இருக்கிறார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எந்தநோக்கத்துக்காக வாக்களித்தீர்களோ அந்த நோக்கம் முழுமையாக நிறைவேற இந்தத் தேர்தலில் தி.மு.க கூட்டணிக்கு வாக்களியுங்கள்.

இந்தத் தேர்தலில் தி.மு.கவின் தேர்தல் அறிக்கைதான் கதாநாயகன். அந்தத் தேர்தல் அறிக்கையைப் பார்த்து ஜெயலலிதா மிரண்டு போயுள்ளார்.

ரூபா 2 இற்கு ஒரு கிலோ அரிசி, இலவச ரி.வி, நிலமற்றவர்களுக்கு நிலம், கூட்டுறவுக் கடன் தள்ளுபடி உள்ளிட்டவை சர்ச்சையாக்கப்பட்டுள்ளன.

தேர்தல் வாக்குறுதி பற்றிப் பேச அவர்களுக்குத் தகுதி இல்லை. கடந்த தேர்தலின்போது ஜெயலலிதா அறிவித்த தேர்தல் அறிக்கையில் தெரிவித்த திட்டங்களை செயற்படுத்தினாரா? எனத் தெரிவித்தார்.

# சோனியா சென்னை வருகை; பாதுகாப்புக்கு நவீன கார்!




சென்னை —

காங்கிரஸ் கட்சி தலைவி சோனியாகாந்தி தேர்தல் பிரசாரத்துக்காக சென்னை வருவதையொட்டி அவரது பாதுகாப்புக்கு நவீன கார்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

தேர்தல் பிரசாரம் செய்ய சோனியா காந்தி 25 ஆம் திகதி சென்னை வருகிறார். மதுரை, புதுச்சேரி ஆகிய இடங்களிலும் பிரசாரம் செய்யவுள்ளார்.

சோனியாவின் பாதுகாப்பு கருதி 3 நவீன கார்கள் நேற்று முன்தினம் சென்னைக்கு கொண்டுவரப்பட்டன. இந்தக் கார்கள் பல்வேறு பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியதென பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழகத்தில் அரசியலுக்குப் பதிலாக அரிசியியல் பற்றியே பேசப்படுகிறது

## பாரதீய ஜனதா குற்றச்சாட்டு

சென்னை —

கடந்த 40 ஆண்டுகாலமாக தமிழகத்தின் வளர்ச்சி தடைப்பட்டுள்ளது என்று பாரதிய ஜனதா மாநில பொதுசெயலாளர் எச். ராஜா தெரிவித்தார். சென்னையிலுள்ள கட்சி அலுவலகத்தில் நிருபர்களுக்கு பேட்டியளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் -

தமிழ் நாட்டில் தற்போது அரசியல் பேச்சு இல்லை. அரிசியியல் பற்றித்தான் அதிகமாக பேசப்படுகிறது. அ.தி.மு.க, தி.மு.க ஆகிய இரண்டு திராவிடக் கட்சிகளுமே நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளைக் கொடுத்து மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றன.

தி.மு.க கூறிபடி 2 ரூபா வுக்கு ஒரு கிலோ அரிசி வழங்கவும், தொலைக் காட்சி கொடுக்கவும் ஆண்டுக்கு 1200 கோடி ரூபா நிதி தேவைப்படும். ஏற்கனவே தமிழக வரவு செலவுத் திட்டம் பற்றாக்குறையானது. இந்த நிலையில், 1200 கோடி ரூபாவுக்கு என்ன செய்வார்கள். ஒருவேளை அந்த நிதியை ஒதுக்கீடு செய்துவிட்டால் வளர்ச்சித்திட்டங்களுக்கு எங்கே போவார்கள்?


கிராமங்களில் போதிய வீதி வசதியில்லை. இந்த நிலையில் இலவச தொலைக்காட்சி தேவையா? சாலை வசதி, வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம் உட்பட அடிப்படை வசதிகளுக்குத்தான் முக்கியத்துவம் தரவேண்டுமே தவிர, இலவச தொலைக்காட்சிக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடாது.

மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்று ஒரு காலத்தில் சொல்லிக்கொண்டிருந்த தி.மு.க. தற்போது மாநிலத்தில் கூட்டாட்சி பஞ்சாயத்தில் சுயாட்சி என்று சொல்லும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. பெரியார் சினிமாவை எதிர்த்தார். தியேட்டர்களுக்கு பூட்டுபோட வேண்டும் என்று சொன்னார்.

ஆனால், பெரியாரின் சீடர் என்று சொல்லும் கருணாநிதியோ பெரியார் சொன்னதற்கு நேரெதிராக செயற்படுகிறார். இலவசமாக தொலைக்காட்சி கொடுத்து மக்களை சினிமா பார்க்கச்செய்து அவர்களின் சிந்தனைகளை மழுங்கடிக்கப்பார்க்கிறார். கடந்த 40 ஆண்டு காலமாக திராவிட கட்சிகளின் போக்கால் தமிழ்நாட்டில் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது. இதையெல்லாம் மக்கள் புரிந்து கொள்வார்கள். இந்த 2 கட்சிகளுக்கும் மாற்றாக பா.ஜ.க இருந்து வருகிறது எனத் தெரிவித்தார்.

# தன்மானம் இல்லாதவனாக தமிழனை தி.மு.க கருதுகிறது

## என்கிறார் இல.கணேசன்



சென்னை

தமிழனை தன்மானம் இல்லாதவனாக தி.மு.க கருதுகிறது என்று பா.ஜ.க தலைவர் இல.கணேசன் தெரிவித்தார்.

சமீபகால மாக தி.மு.கவும் அதன் கூட்டணியினரும் மேடைகளில் பேசுவதை கேட்கும் போது எனக்கு என்ன பேசுவது என்றே தெரியாமல் தடுமாற்றத்தில் இருக்கிறேன். எல்லா கட்சியும் அரிசியைப்பற்றியே பேசுவதால் பாரதிய ஜனதா கட்சி எதை வைத்து பேசுவது என்று தெரியாமல் இருக்கிறது.

ஒரு கட்சி கிலோ அரிசி 2 ரூபாவுக்கு தருவோம். இந்த ஆதாரத்தை வைத்துதான் தேர்தலைச்சந்திக்கிறோம் என்கிறார்கள். இன்னொரு கட்சி 10 கிலோ அரிசி இலவசம் என்று சொல்கிறது. இவை இரண்டையும் பார்த்துவிட்டு வேறொருவர் அரிசி மட்டும் இருந்தால் போதுமா சமையல் பொருட்கள் வேண்டாமா என்று அதற்காக 100 ரூபா தருவோம் என்று சொல்கிறார். இதை எல்லாம் வைத்து பார்க்கும் போது பாரதிய ஜனதா கட்சி எல்லோருக்கும் 3 வேளை சாப்பாடு தருவோம்என்றுதான் சொல்லமுடியும்.


தமிழகத்தில் உள்ள 50இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை இலவசமாக ஏழைகளுக்கு தருவேன் என்று சொல்கிறார் கருணாநிதி. ஆனால், தமிழகத்தில் 50இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் இல்லை. 30இலட்சம் ஏக்கர் தான் உள்ளது என்று முதல்மைச்சர் அறிவித்து இருக்கிறார். இதனால் மக்களுக்கு குழப்பமாக உள்ளது. ஆனால் எனக்கு குழப்பம் இல்லை. தமிழகத்தில் 30 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் மட்டுமே உள்ளது.

அடுத்ததாக ஒரு ரூபாவுக்கு 2 கிலோ அரிசி சாத்தியமா இல்லையா என்று கேட்டால் - கொடுக்கமுடியுமா என்பது கேள்வி அல்ல என்கிறார் நிதியமைச்சர் ப.சிதம்பரம். பிரதமர் மன்மோகன் சிங் அரசு கடந்த மாதம் 50 லட்சம் தொன் கோதுமையை இறக்குமதி செய்தது. இன்று 35 லட்சம் தொன் கோதுமை இறக்குமதி செய்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. உணவை இறக்குமதி செய்யும் காலகட்டத்துக்கு மத்திய ஆட்சி வந்து விட்டது. இப்படி இருக்கும் போது எங்கிருந்து அரிசியைக்கொடுப்பார்கள்.

1967 இல் ரூபாவுக்கு 3 கிலோ அரிசி அல்லது முச்சந்தியில் சவுக்கடி என்று அண்ணா சொன்னார். ஆனால், சொன்னபடி அரிசியை வழங்கினார்களா? அது போல் கருணாநிதியின் ஆட்சியில் கரும்பு தொன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா தருவதாக கூறினார். பின்னர் குறிப்பிட்ட ரகத்துக்கு மட்டுமே தருவதாக அறிவித்தார்.

அவர்கள் சொன்னதை எதையாவது செய்திருக்கிறார்களா? இதையெல்லாம் காவிரியில் ஓடும் தண்ணீரில் தான் எழுத வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஓய்வு இல்லாத ஜெயலலிதாவிற்கு ஓய்வளிக்க கோருகிறார் கருணாநிதி



சென்னை

மக்களுக்காக 20 மணிநேரம் உழைக்கும் ஜெயலலிதாவுக்கு ஓய்வு அளியுங்கள் என்றார் தி.மு.க தலைவர் கருணாநிதி.

வராமல் இருக்கமாட்டேன். வந்துவிடுவேன். வரத்தான் போகிறேன். இந்த மூன்று வாக்கியங்கள் இன்றைய அரசியல் நிலையை விளக்கும் வகையில் உள்ளன. இன்று இரண்டு அணிகளுக்கு இடையே தான் பிரதான போட்டி. ஒன்று ஜனநாயக முற்போக்கு கூட்டணி, மற்றொன்று ஜனநாயகத்தை எங்கே வாங்கலாம். அது கறுப்பா, சிவப்பா என கேட்கிற சர்வாதிகார அணி. ஐந்து ஆண்டு காலை பாலைவன ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து சோலை வனமாக மாற்ற வேண்டும்.

ஜெயலலிதா ஓய்வு இல்லாமல் மக்களுக்காக 20 மணிநேரம் உழைப்பதாக கூறுகிறார். எதற்காக இவ்வளவு கஷ்டப்பட வேண்டும். ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். அந்த ஓய்வை நாங்கள் தருகிறோம். மே எட்டாம் திகதி தமிழர்கள் தலையெழுத்தை எழுதுகின்ற தீர்ப்பு. ரூபா 2க்கு 1கிலோ அரிசி என நாங்கள் கூறியதை எப்படி தருவீர்கள் என்றவர்கள். இப்போது 10 கிலோ அரிசி இலவசமாக தருகிறாராம். இப்போது மட்டும் எப்படி தருவீர்கள்.

நேற்றுவரை பல்வேறு பத்திரிகைகள் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக கருத்துக் கணிப்புக்களை வெளியிட்டன. இன்று லயோலா கல்லூரி மாணவர்கள் கருத்துக் கணிப்பில் தி.மு.கவுக்கு வெற்றி வாய்ப்பு என அறிவித்துள்ளனர். அதில் கூட அவர்கள் நான்கு சதவீதம் தான் கூடுதல் என அடக்கி வாசித்துள்ளன, என்று கருணாநிதி கூறினார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இரண்டு கொலைகளுக்கு எல்லாளன்படை உரிமை!

யாழ்ப்பாணம்

கடந்த சில நாட்களுக்கு முன்னர் சுழிபுரத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட தவசி தவச்சந்திரன் மற்றும் நேற்று நாவாந்துறையில் சுட்டுக்கொல்லப்பட்ட அமிர்தநாதன் ஜெனிற ஆகிய இருவரது கொலைகளுக்கும் யாழ். மாவட்ட எல்லாளன் படை உரிமை கோரியுள்ளது. இது தொடர்பாக எல்லாளன்படை உரிமைகோரி வெளியிட்ட அறிக்கையில் -

மேற்படி நபர்கள் இருவரும் எமது தேசத்தை அழிக்க கங்கணம் கட்டி நிற்கும் எதிரிகளுடனும் எதிரிப் புலனாய்வாளர்களுடனும் தேசத் துரோகிகளுடனும் இணைந்து தமிழ்த் தேசியப் பற்றாளர்களை எதிரியிடம் காட்டிக்கொடுத்து படுகொலை செய்தவர்கள்.

அதனாலேயே இந்தத் தீர்ப்பை அவர்களுக்கு வழங்கியுள்ளோம். இவ்வாறு எதிரிகளுடனும் எதிரிப் புலனாய்வாளர்களுடனும் இணைந்து செயற்படுவோர் தேசத் துரோகிகளுக்கு துணைபோவோர் யாவரும் உடனடியாக தமது தமிழின துரோகத்தனங்களை கைவிடுமாறும் மீறுவோர் எமது தண்டனைக்கு உட்படுவார்கள் என்பதையும் கூறிவைக்கிறோம் எனக் கூறப்பட்டுள்ளது.

# புலிகள் மீது சர்வதேச சமுகம் தடைகளை விதிக்கவேண்டும்

## என்கிறது அரச சமாதான செயலகம்

கொழும்பு

விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் பேச்சுக்கு இணங்க மறுத்தால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உட்பட சர்வதேச நாடுகள் அவர்களுக்கு தடைவிதிக்க வேண்டுமென அரசாங்க சமாதான செயலகம் கேட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு அரசாங்கம் பதில் அனுப்பியுள்ளது. இதற்கு அவர்கள் அனுப்பும் பதில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அரசாங்கம் தற்போது விடுதலைப் புலிகளுக்கு அனுப்பியுள்ள பதிலைப் பொறுத்தவரையில் அவர்களின் வெளிப்பாடு மீண்டும் ஒருமுறை அரசாங்கத்தால் மன்னிக்கக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் இதுவரை காலம் வழங்கிய மன்னிப்பு பொதிக்கான காலவரையறை கடந்துவிட்டது.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வன்முறைகளையும் அதே நேரம் பேச்சுக்களுக்கான பின்னடிப்பையும் மேற்கொள்வார்களாக இருந்தால் அது குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும், சர்வதேசமும் கூடிய கவனத்தைச் செலுத்தவேண்டும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் போக்குவரத்துத் தடைகளை விதித்துள்ளது.

இந்தநிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்முறை நடவடிக்கைகள் தொடருமானால் அவர்கள் மீது ஐரோப்பிய ஒன்றியம் மேலும் தடைகளை விதிக்க வேண்டும் என அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை - முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் உட்கட்ட சந்திப்புக்களுக்காக தளபதிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதை அரசாங்கம் நிறுத்திவிட்டதாக நேற்றைய மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் கேஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்கம் தொடர்ந்தும் சமாதான முனைப்புக்களுக்காக விட்டுக் கொடுப்புக்களை மேற்கொண்டு வருகிறது.

எனினும், தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த விடயத்தில் பின்னடிப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே சர்வதேசம் - குறிப்பாக சமாதான முயற்சிகளில் ஏற்பாட்டாளராகச் செயற்படும் நோர்வே - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இந்த விடயத்தில் அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியுமென அமைச்சர் குறிப்பிட்டார்.

## காயமுற்ற சிப்பாய் கொழும்பில் மரணம்

பொலநறுவ

பொலநறுவ - சிங்கபுர பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் படுகாயமுற்ற மற்றொரு இராணுவச் சிப்பாய் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணமடைந்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் நடத்தப்பட்ட தாக்குதலில் 6ஆவது கெமுனு வோச் பற்றாலியன் பிரதி தளபதி மேஜர் பேர்டி ஜெத் கொல்லப்பட்டதுடன் 7 படையினர் காயமடைந்தனர்.

இவர்களில் ஆபத்தான நிலையில் இருந்த ஒருவரே கொழும்பு தேசிய வைத்திய சாலையில் மரணமானார். (01)

# ஏழு வாரங்களில் 62 பேர் படையினரால் படுகொலை

## நிசோர் குற்றச்சாட்டு

கொழும்பு

இராணுவத்தால் தமிழர் தாயகத்தில் கடந்த ஏழு வாரங்களில் 62பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகமான நிசோர் தெரிவித்துள்ளது.

நிசோர் வெளியிட்ட அறிக்கையில் -படுகொலை செய்யப்பட்ட 62 பேரின் முழு விபரமும், அவர்கள் எப்படி படுகொலை செய்யப்பட்டனர் என்ற விபரமும் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையில் மட்டும் 21 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் மட்டக்களப்பில் படுகொலைகள் நடத்தப்பட்டுள்ளன.

சிறு வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் அதிகமாக இலக்கு வைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

நாளொன்றுக்கு இரு சம்பவங்கள் வீதம் நடைபெறுவதாகவும் ஏப்ரல் 18ஆம் திகதி இந்த அறிக்கை வெளியான பின்னர் இரு கடத்தல் சம்பவங்கள் நடந்துள்ளதாகவும் நிசோர் அமைப்பின் செயலாளர் கலாநிதி. என்.மாலதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்கு வெளியே தமது அமைப்பினருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் நிலைகள்மீது மோட்டார் தாக்குதல்

மட்டக்களப்பு

மட்டக்களப்பு வவுணதீவில் விடுதலைப் புலிகள் மீது இராணுவத்தினர் நேற்று தாக்கியதில் மூன்று போராளிகள் படுகாயமடைந்துள்ளனர்.

வவுணதீவில் பதுங்குழிகளை சீரமைத்து கொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது இராணுவத்தினர் மோட்டார் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் மூவர் படுகாயமடைந்ததாக மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்துள்ளார்.

ஆனால், இராணுவத்தினர் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவியதால் நடத்தப்பட்ட பதில் தாக்குதலில் மூன்று போராளிகள் படுகாயமடைந்தனர் என்று இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

# இரு தமிழ் இளைஞர்கள் பொலநறுவவில் கைது

பொலநறுவ

பொநறுவ - கதுறுவெல பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என்ற சந்தேகத்தில் இரு இளைஞர்களை கைது செய்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை கைதான இருவரில் ஒருவர் உடனடியாக சயனட் அருந்தியதாகவும் - ஆபத்தான நிலையில் பொலநறுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து கொழும்புக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, கைதான இருவரும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்யும் நோக்குடன் அந்தப் பகுதியில் நடமாடியவர்கள் என்றும், அமைச்சரின் வீட்டுக்கு அருகில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (01)

## இராணுவ சிப்பாய் வவுனியாவில் காயம்

வவுனியா

வவுனியா - இரணை இலுப்பைக் குளம் பகுதியில் படையினர் மீது நேற்று முன்தினம் மாலை நடத்தப்பட்ட தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.55 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் சரத்குமார என்ற சிப்பாயே காயமடைந்து அநுராதபுரம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# வெலிக்கந்த தாக்குதலில் இரு படையினர் காயம்!

பொலனறுவ

பொலனறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்த பகுதியில் நேற்றுக்காலை இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு படையினர் படு காயமடைந்தனர்.

வெலிக்கந்த பகுதிக்குள் நுழைவதற்கான சோதனைச்சாவடி மீதே வடமுனையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 6.30 மணியளவில் நடத்தப்பட்ட இந்தக் கைக்குண்டுத் தாக்குதலை அடுத்து சுமார் 20 நிமிடங்கள் அந்தப் பகுதியில் துப்பாக்கிச்சண்டை நீடித்தது.

இதையடுத்து காலை 9.30 மணியளவில் அப்பகுதியைச் சுற்றிவளைத்து படையினர் தேடுதல் நடத்தினர்.

## இருபாலையில்...

நின்றிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுதபாணிகள் அவரைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச்சென்றனர்.

இந்தச்சம்பவத்தில் இருபாலை கட்டப்பிராயைச்சேர்ந்த ஓட்டோ சாரதியான குருநாதன் ஜனார்த்தனன் (வயது23) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இதேவேளை, இந்தச்சம்பவம் இடம்பெற்ற வேளை இருபாலைச்சந்திப் பகுதியில் இராணுவத்தினர் கடமையிலீடுபட்டிருந்த போதும், மோட்டார் சைக்களில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் தப்பிச்சென்ற பின்னரே அவர்கள் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

இதையடுத்து இருபாலைச்சந்திப் பகுதியில் நின்றிருந்த பொதுமக்கள் சிதறியோடினர். அந்தப்பகுதி வர்த்தகநிலையங்களும் இழுத்து மூடப்பட்டு மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடியது.

இளைஞரைச் சுட்டுவிட்டு பழம் வீதியால் தப்பிச்சென்ற இனந்தெரியாத நபர்கள் குடும்பஸ்தர் ஒருவரின் மோட்டார்சைக்கிளை துப்பாக்கியைக் காட்டி மிரட்டி பறித்துச்சென்றதுடன், தமது மோட்டார் சைக்கிளை அங்கேயே போட்டுவிட்டு தப்பிச்சென்றனர். பின்னர் இனந்தெரியாத நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளை எடுத்துச்சென்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற்கொண்டதோடு, சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து, மேற்படி இளைஞரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டது.

இந்த இளைஞரை கடந்த சில மாதங்களாக இராணுவத்தினர் தேடி வந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, சுட்டுக்கொல்லப்பட்டவரின் மனைவி சோகம் தாங்கமுடியாது நஞ்சருந்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (82)

## புளொட்...

அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவர் யாழ்.போதனா வைத்தியசாலை சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் வைத்து கடந்த ஜனவரி மாதம் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது

## பாரிய...

கொலைவெறி ஆட்டத்தின் வெளிப்பாடாக- புத்தூரிலும், காரைநகரிலும், இருபாலையிலும் இன்னும் தொடர்வதை நாங்கள் பார்த்திருக்கமுடியாது.

சிங்கள கூலிப்படைகளுக்கு எதிரான எமது தாக்குதல்கள் பாரியளவில் பரவலாக நடத்தப்படும் என்பதைக் கூறுவதுடன், அன்பான மக்களே! உங்களின் பாதுகாப்பு கருதி எமது தாக்குதலுக்கு இடையூறு இன்றி மிகவிரைவாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுங்கள். இது எமது அன்பான கட்டளை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐஸ்கிறீம்...

கே.கே.எஸ் வீதியூடாக சென்று கொண்டிருந்த ஐஸ்கிரீம் வான்- நாச்சிமார் கோவிலை அண்மித்தபோது மேற்கொள்ளப்பட்ட சரமாரியான துப்பாக்கி பிரயோகத்தில் வானின் பின்புறமாக இருந்தவர் காயமடைந்தார். வானும் பலத்த சேதத்துக்குள்ளானது.

இதேவேளை, இந்தச் சம்பவம் நடைபெற்ற சில நிமிடங்களுக்கு முன்பு சிவன் கோவிலடியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள் ளப்பட்டதாகவும் அதற்குப் பின்னரே வான் மீது தாக்குதல் நடத்தப் பட்டதாகவும் தெரியவருகிறது.

## மூன்று...

என்றும், இந்தத்தாக்குதலின் போது சந்தன குமார என்ற ஊர்காவல் படைவீரர் படுகாயமடைந்து அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் படைத்தரப்பு செய்திகள் தெரிவித்தன.

மேற்படி சம்பவங்களில் சில ஆயுதங்களை தாம் மீட்டதாகவும் படைத்தரப்பு செய்தி வெளியிட்டுள்ளது. (10)

## ஆறு சிங்களவர்...

சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்களில் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவரும் அடங்குவதாக தெரியவருகிறது. மேலும், ஆறு பேரைக் காணவில்லை எனவும் நான்குபேர் காயமடைந்து அநுராதபுரம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இனமோதலை உருவாக்க திட்டமிட்டு இந்தச் செயல்கள் நிகழ்த்துப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

## புலிகளின்...

கிளைமோர் தாக்குதல் நடந்த இடத்துக்கு கண்காணிப்புக் குழுவினரை ஞானம் அழைத்துச் சென்று பாதிப்புக்களை காண்பித்தார்.

அண்மைக்காலத்தில் இருந்து வன்னிப்பகுதிக்குள் படையினர் ஊடுருவி நடத்திய 6 கிளைமோர் தாக்குதல்களில் 5 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இராணுவ ஊடுருவல் அணியினரால் வேட்டைக்குச் சென்ற தமிழர் மூவர் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டனர்.

324, Palaly Road, Jaffna. Diploma in Computerized Accounting
#MYOB #Quick Book Pro #Accpack
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன, அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது
பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்
*****Supported by UNDP/JRRP*****

AIMS
Your Training Partner
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
Aim 01: Microsoft Office
Introduction,
Word, Excel, Access, PowerPoint.
Morning& Evening Batches
Morning : 9.30 am
Evening : 3.30 pm
Fast Track (1500/- மட்டும்)
இன்று ஆரம்பம்
Introduction, Generation & Types, Components, Assembling, Basic DOS Commands, O/S Installation, Setup & Configuration.
Aim 02: Computer Hardware
10 நாட்கள் மட்டும்
Center for FOSS & LAMP
Director AIMS
#118, பலாலி வீதி,
தபால் பெட்டிச் சந்தி
அருகில்,
திருநெல்வேலி

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.